உ

சிவமயம்.

# குணவாகடம்.

இதனுள்

திருமூலநாயனர்

## அகஸ்தியமஹாமுனிவர்

தேரையர்

இவர்கள் திருவாய்மலர்ந்தருளிய
பிண்டோற்பத்தியும், முதல்வந்தனுபவிக்கும்
நோய்களின்குணங்களும், நாடிப்பரிட்சைகளும்,
கஷாயவகைகளுமாகியபாடல்கள் ௬௨௧
அடங்கியிருக்கின்றன.

இஃது,

திருவெண்காடு

## ஆறுமுகசாமிகளால்

பார்வையிடப்பட்டு,

திருவொற்றியூர்

இருசப்பமுதலியார்-குமாரர்

## பரசுராமமுதலியாரது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

௧௮௮௫ வரு

உ

கடவுள்துணை.

# புத்தகவிளம்பரம்.

—()—

இதனால் சகலமானபேர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் சென்னையைச்சார்ந்தசூளைஇருங்குன்றம் இலட்சுமிநாராயணபுரத்தில் தொட்டிக்கலைகுமரப்பமுதலியார்வீதியில் ௩௪ -வது கதவிலக்கமுள்ள வீட்டில் தாபித்திராநின்றபாரப்பிரமமுத்திராக்ஷரசாலையில், இதனடியில் கண்டிருக்கப்பட்டபுத்தகங்களல்லாமல்; கற்றுணர்ந்தபெரியோர்களால்பிழையறப்பரிசோதித்துஅச்சிடப்பட்டமிக மேலாகியஉபயோகமுள்ளபலவித வேதாந்தசித்தாந்த கிரந்தங்களும், வயித்தியகிரந்தங்களும், ஜோசியகிரந்தங்களும், மகம்மத மார்க்கக்கிரந்தங்களும், இன்னும்அனேகவிதமான தமிழ்ப்புத்தகங்களும், விலைசரசமாய் விற்கப்படுமாகையால்,வேண்டியவர்மேற்படி அச்சுக்கூடத்தலைவராகிய தி. இ. பரசுராமமுதலியாரிடத்தில் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீமகாபாரதக்கீர்த்தனை காலிகோ பவுண்டுடன் கிரயரூபாய் ௩,0
ஸ்ரீமத்கம்பராமாயணவசனம்
ஞானவாசிட்ட மூலமும்-உரையும்
பிரமோத்தரகாண்டம்மூலமும்—உரையும்
ஸ்ரீவிஷ்ணுபுராணவசனம்
பதார்த்தகுணவயித்தியஅரும்பொருளகராதி
பதார்த்தகுணசிந்தாமணி
சதுரகராதி
ஸ்ரீமகாபாகவதம்(மூ-அ) லெத்தகிராப்படத்துடன்
ஆத்மரட்சாமிர்தமென்னும் வயித்தியசாரசங்கிரகம்
அகத்தியர் வமதத்துவமென்னும்பஞ்சகாவியநிண்டு அா
தக்ஷிணாமூர்த்தி திருமந்திரம் ௩ரூா
சுனேந்திரமாலை
தன்வந்திரி கலைக்ஞானம் ரூா
சிமிட்டுரத்தினச்சுருக்கம் ௩ ாகூய
அகத்தியர்ஆயுள்வேதம் ௩உா
மேற்படியார் பாலவாகடம் ௩ா
சிதம்பரபுராணம்
விநாடிபஞ்சபட்சி
அராபிக்கதை-௩—வால்ம்
நளவீமபாகசாத்திரம்
வீமேசுரஉள்ளமுடையான்
ஐந்துபடைப்போர்
அப்பாசநாடகம்
பலவித்துவான்கள்பதம்

ஸ்டாம்பு அனுப்பினாலல்லது பதில் கடிதம் அனுப்பப்படமாட்டாது.

உ

கடவுள் துணை.

# குணவாகடத் திரட்டு.

திருமூலநாயனார்

அருளிச்செய்தது.

---

### விநாயகர்—துதி.

அந்திநிறத்தனையானைமுகத்தனை
இந்துவிளம்பிறைபோலுமெயிற்றனை
நந்திமகன்றனைஞானவிளக்கைப்
புந்தியில்வைத்தடிபோற்றுகின்றேனே.

---

### தேவிதுதி.

தாதாவைப்போலத்தண்ணருள்கொடுப்பவள்
வேதாகமத்தின்மெய்ஞ்ஞானமெய்ப்பொருள்
ஆதாரசத்திநலரிவமனோன்மணி
மாதாவின்பாதம்வைத்தேனென்சென்னியில்

---

### கருப்போற்பத்தி.

சென்னியில்வைத்தேதிருநந்திதாளிணை
மன்னியகாயம்வந்தவகையாம்
கன்னிவகுத்தகருப்பத்திருமந்திரம்
உன்னியுரைத்தேனொருநூற்றிருபதே

உடலுற்றவாறு முயிருற்றவாறும், மடையுற்றவொன்பதுவாயிலி னூறும், திடமுற்றதத்துவசீவபுலன்களும், கடலுற்றநீர்போற் கண்டகருவிதே ௩

கருவையொழிந்தவர்கண்டநான்மூவேழும், புருடனுடலிற்பொழிந் ததுமற்றொன்றும், தெரிவைகருக்குழிதேயுபுகுந்தே, உருவ மிரண்டா யோடிவிழுந்ததே ௪

விழுந்ததிலிங்கம்விரிந்ததியோனி, ஒழிந்ததுமுதலைந்துயிரோ டே றித், தெழிந்ததப்புத்தேற்றுங்குணமும், பொழிந்துபுகுந்ததுபுணர்கின் றபோதே ௫

போகின்றதெட்டும்புகுகின்றபத்தெட்டும், ஆகின்றமுற்றினுமொன் பதுவாயிலும், நாகனுமெட்டும்நான்கிரவிமதியும், பாகடாவிடிற்படர்ந்த னலாமே ௬

ஏறவெதிர்க்கிலினலயன்றானாகும், நேரொக்கவாகினிசர்போதந்தானா கும்; மாறவெதிர்க்கின்மறையவன்றானாகும், பேரொத்தமைந்தனும்போ ரசாளுமே ௭

ஆண்மிகினாணும்பெண்மிகிற்பெண்ணாம், பூணுமிரண்டொன்றிப் பொருந்திலலியாகும், தாண்மிகவாயிற்றாணிமுழுதாளும், பாண்மைமிகு ந்திடிற்பாய்ந்ததுமில்லையே ௮

வயது.

பாய்ந்துமுன்னைங்கோடிற்பாராயுணூறும், பாய்ந்துபின்னைந்தோடி ற்பார்வயதைம்பதாம், பாய்ந்திடும்வாயுப்பகுத்தறிந்திவ்வகை,பாய்ந்திடு ம்போதிக்குப்பாய்ச்சலுமாமே ௯

அங்கவீனம்.

பாய்கின்றவாயுக்குறுகிற்குறளனும், பாய்கின்றவாயுவலையின்முட மாகும், பாய்கின்றவாயுநடுப்படிற்கூனாகும்; பாய்கின்றவாயுமாதர்க்கிலை பார்க்கிலே ௰

மந்தன்—ஊமை—குருடன்.

மாதாவுதரமலமிகின்மந்தனாம்,மாதாவுதரஞ்சலமிகிலூமையாம், மா தாவுதரத்திரண்டொக்கிற்கண்ணில்லை, மாதாவுதரத்தில்வந்தகுழவிக்கே.

ஆண்—பெண்—அலி—இரட்டைப்பேறு,

குழவியுமாணாய்வலத்தாதேயாகில்;குழவியும்பெண்ணா மிடத்தாது வாகில், குழவியுமிரண்டாமபானனெதிர்க்கில்,குழவியுமலியாங் கொண்ட சாலொக்கிலே ௰௨

கொண்டநல்வாயுவிருவர்க்குமொன்றிடில்; கொண்டகுழவியும்கோமளமாய்விடும்; கொண்டவிவ்வாயுக்குறிப்பறிந்திவ்வகை, கொண்டதுயில்லைகோலமுன்றாதே ௰௩

பஞ்சபூதபிண்டோற்பத்தி.

உன்னியகர்ப்பக்குழிபாம்வெளியிலே, பன்னியநாதம்பகர்ந்தபிருதிவி,வன்னியும்வாயுவுமாயுறுஞ்சுக்கிலம்,மன்னியசமனைய்வளர்க்குமுதகமே

உதகமுதிரமுறுங்கனல்வாயுவால், சிதகுறுமங்கள்செய்துமுடித்திடும், பதகுறுமுரோமம்பகர்தசையத்தி, நிதகுறு மொன்பதுவாயிலுநீங்குமே ௰௫

நீங்கிடநீங்கிடநிமிர்ந்துவளர்ந்தோங்கும்ஒங்கிடவோங்கிடவுறுதியாம்வாயுவும், வாங்கிடவாங்கிடவன்னிதலைக்கொள்ளும்; பாங்கிடப்பாங்கிடப்பத்தாருக்திங்களே ௰௬

திங்கள்பத்தாகிற்றேயுடன்வாயுசேர்ந், தங்கிமலர்த்தியமளியாய்க்கிழ்நோக்கிப், பொங்கிப்பிறந்தநாள்புகழ்வார்வெறுவீணர், தங்கிச்செனிக்கையிற்றானேயுமுற்றதே ௰௭

மூலநாடி-எ௨௬-த்தில்-தசநாடி

உற்றவிவாமுறுதியாமெந்நந்தி, பற்றியமூலம்பகர்ந்திடுநாடிதான், எற்றியேயெண்ணிடிலெழுபத்தீராயிரம், மற்றதிற்பத்துவளமானநாடியே()

தசநாடியில்-தசவாயுவும்-திரிநாடியும்
சு-சக்கரமும்-௩-மண்டலமும்

வளமானபத்தில்வழங்குந்தசவாயு, உளமாமிடையிற்சுழியெனமூன்றுண்டு, களமானசக்கரங்காட்டியதாறுண்டு, தளமானமண்டலம்தான்மூன்றும்பாருமே ௰௯

பாருமிடைகலைபின்கலைமாறியே,தாரும்பெருவிரற்காலொடுதானேறிகாருங்கழுத்திற்கபாலவரைநின்று, வாருமிடமாய்வலக்காஞ்சாருமே ௨௰

வலக்கரந்தன்னில்வளமானபின்கலை, கிலைக்கவிடக்காநின்ற திடைகலை, துலக்கநடுமையஞ்சுழினையோடிடும், பிலக்கவிவைமூன்றூற்பிறந்ததுதாதுவே ௨௧

மூவகைநாடியில் மூவகைத்தாது.

வாதுமுறையேதனியிடைவாதமாம், போதபின்கலைபுகன்றதுபித்தமாம், மாதுசுழிமுனைவழங்கிடுமையமாம், ஓதுமுறைபார்த்துணர்ந்தவர் சித்தரே ௨௨

## மூவகைவாயுநாடி

உணர்ந்தவபானனுறுமந்தவாகத்தில், புணர்ந்தபிராணன்புகுமங்கப்பித்தத்தில, அணைந்தசமானனடங்கும்கபத்தோ, டிணைந்திவைமூன்றுகமெடுத்தகுறியொன்றே ௨௩

## மூலவகைநாடியறியும்விவரம்

குறியாம்வலக்கரம்குவிந்தபெருவிரல், மறியாவதன்கிழ்வைத்திடுமூவிரல், அறிவாய்மேலேறிப்பெலத்ததுவாதமாம்,அறிவாய்நடுவிரலமர்ந்தது பித்தமே ௨௪

பித்தத்தின்கீழேபுரண்டதையமாம்; உற்றுற்றுப்பார்க்கவோர்சாமபேயோடும், பக்தித்தமூவரும்பாய்கின்றவேகத்தால்;மத்தித்தாளம்போலவழங்குகரம்பிதே ௨௫

## மூவகைநாடியறியுமாத்திரை

வழங்கியவாமமாத்திரையொன்றாகில், தழங்கியபித்தம்தன்னில்லைவாசி, அழங்குங்கபந்தானடங்கியேகாலோடில், பிறங்கியசீவதகும்பிக்கொன்றுமில்லையே ௨௬

## மூவகைநாடிநடப்பு.

இல்லையேவாதமெழினடைகோழியாம்,எல்லையேபித்தமெழும்புந்தவளைபோல், ஒல்லையேயையமூர்ந்திடும்பாம்புபோல், அல்லையேகண்டறிந்தவர்சித்தரே ௨௭

## வாதபித்தசிலேத்துமமிருப்பிடம்

அறிந்திடும்வாதமடங்குமலத்தினில், பிறிந்திடும்பித்தம்பேசாஞ்சலத்தினில், மறிந்திடுமையம்வாசிக்கும்விந்துவில், உறைந்திடுமூன்றுக்குறைவாந்தலமிதே ௨௮

## வாதபித்தகபவர்ணம்.

உறவாங்கறுப்புஞ்சிவப்புறுநல்வாதம், குறைவானபச்சைப்பசுமையொடும்பித்தம், நிறைவானவெண்மையால்நின்றதுநல்லையம், அறைவானவர்ணமதாகுந்தலமதே ௨௯

## தேகபஞ்சபூதகம்.

சலங்காட்டிபித்தச்சடமானவைம்பூதம், நிலங்காட்டிநீர்காட்டிநின்றிடுந்தீக்காட்டி, வலங்காட்டிவாயுவால்வளர்ந்தேயிருந்தது, குலங்காட்டிவானிற்குடியாயிருந்ததே ௩௰

இருந்தவிவ்வைந்தாலெடுத்தசடமிது; பிரிந்திடுமாமிசம்பிருதிவிமயமாகும், சொரிந்திடுமபிர்தநீர்சொற்குறியப்புவாம், வருந்தியவன்னி வளமாய்வெதுப்புமே ௩௧

வெதுப்பத்துடனேவிடுபட்டுநாசியில், எதிர்ப்புற்றுநிற்குமிதுகாணும்வாயுவாம்,கதைப்பொத்தேயெல்லாங்கவளித்திடமிட்டு, மதிப்பொத்துநிற்கும்வானின்வளப்பமே ௩௨

வளப்பங்கேள்பூமிவாசிக்குநாசியில்,களப்பமாம்வன்னி தானுறுங்கண்ணினில், அளப்பமாமப்போவடங்கிடுநாவினில், பளப்பநல்வாயுப்பரிசிக்குமெங்குமே க௩

எங்கியகாதிலிருந்துறுமாகாசம், பொங்கியதைந்துக்குட்பொல்லாதிம்மூன்றுதான், தங்கியவாயுச்சமர்த்தன்மகாவாதம், பங்கியவன்னியாற்பகிர்ந்ததுபித்தமே க௪

பகுந்தசலத்திற்பரிசிக்குநல்லையம், வகிர்ந்தவிம்மூன்றால்வளர்ந்ததுநோயெல்லாம், அகந்தானறிந்தளவிட்டயோகிகள், மகிழ்ந்தேயிதனின்றமயக்கமறிவரே க௫

வாதகுணம்.

அறியவிம்மூன்றினதாண்மைசொன்னார்நந்தி, எறியநல்வாதமெறிக்குங்குணங்கேளு, குறியெனக்கைகால்குளைச்சுவிலாச்சந்து,பறியெனநொந்துடற்பச்சைப்புண்ணாகுமே க௬

புண்ணாய்வலிக்கும்பொருமுங்குடலோடித், தண்ணுமலத்தைத்தம்பிக்கும்போக்கா, தொண்ணுவாசனமுறவேசுருக்கிடும், பண்ணார்குளிர்சிதம்பகுத்திடும்வாதமே க௭

பித்தகுணம்.

பகுத்திடும்பித்தம்பலபலசிந்தையாம்,வகுத்திடும்ளாந்தியுப் வாய்நீர்மிகவூறும், மகுத்திடுமேனியின்மாட்டியெரிப்பேறும், மிகுத்துத்தாகமனிக்குமிகவிடங்கைக்குமே க௮

ஐயக்குணம்.

விடங்கியவையமேலிரைப்பேற்றிடும், தடங்கியிருமிடும் தளிவிலாவிரண்டுநோம்; அடங்கிற்சுரங்காயுமளவற்றகோழைநீர், இடங்கியுடல்வற்றிபிரத்தமுங்கக்குமே க௯

கக்கியமூவர்களிற்பெலன்கேளு, ஒக்கியவாயுவுடல்கூடிடிற்பெலன், தக்கியவாயுசகலத்துக்காதாரம், சிக்கியநோயைச்சிறக்கவிளக்குமே ௨௰

தாபச்சுரமும்—சீதளச்சுரமும்,

விளக்கியவன்னியும்வாயுவுமேற்கொண்டால், தளக்கியதாபச்சுரங்காணும்தோஷமாம், வளக்கியவப்புவும்வன்னியுமேற்கொண்டால், இதக்கியசீதளசுரங்காணிதன்பேரே ௨௧

தோஷநிறக்குறி,

போானதோஷம்பிறக்குமுறைகேளு' வாரானவாதமும்வன்னிகருந்தோஷமாம், தாறுனபித்தமும்தழலூடில்வெண்மையாம்; சேறுனவையமும்சிவப்பேறும்வாயிலே ௨௨

வாயுவடங்கிறைல்வளமானதோஷம்போம், வாயுவெழும்பிறைன்மண்ணுநீரொன்றாகும், வாயுவுநீரால்வழங்கியவன்னிசாம், வாயுவுமாகாசமண்டலமோசையே ௨௩

ஓசையிலேழுமொளியினிலோரஞ்சும், நாசியின்மூன்றுநாவிலிரண்டும், தேசியுந்தேசனுஞ்சேர்ந்துபிரிந்திடம், மாசிலாநந்திமகிழ்ந்துரைத்தாரே சச

ஓராண்டிலுமீராண்டிலுஞ்சாகுங்குறி

உரைத்தநாசியுறுதிக்குறிகேள், விரைத்திடப்பின்கலைவிடாதேதொடின்மூன்றுநாள், இரைத்தசடமாண்டிலெய்திடுமாகாசம், பாதத்திலிரண்டொட்டாயிலீராண்டேண்ணே சரு

மூவாண்டிலும்-ஆறுதிங்களிலும்சாகுங்குறி

எண்ணியொருநாளியங்கிடிற்பின்கலை, தண்ணியமூவாண்டிற்றப்பாதுமாரணம், ஒன்றியபுயத்திலோடிடிற்பத்துநாள், மண்ணின்மதியாறின்மரிப்பான்குறியிதே சசு

நாள்மூன்றிலும்-பதினஞ்சிலுஞ்சாகும்குறி.

குறிகேளுமூக்கன்றிக்குலவிவாய்வழியோடில், மறிகேளுமூன்றுநாள்மரித்திடுவன்றப்பாது, செறிகேளுமூம்மலமுந்திரண்டுமிகக்குறைந்துவரில், பரிவாகும்பட்சத்திற்பாருயிர்தான்றப்பாதே சஎ

சு-திங்களிலேயும் உடனேயுஞ்சாகுங்குறி.

தப்பாதுவாய்நீர்கான்றுக்கிற்றன்மேல்விழிலே, ஒப்பாகத்தனுமறையவொழிந்திடுவன்மதியாறில், செப்பாகத்தானிருக்கச்சேர்ந்தநிழலழிந்திடினும், அப்பாகேள்சாவுநிசமறிந்துகற்பங்கொண்டிடே சஅ

கொண்டிடும்தோஷக்குறிசொன்னோரென்னந்தி, கண்டுமுகடும்நனிப்பல்துநாக்கொன்றும், மண்டிடுப்தாதுவளமாய்க்கறுப்பேறில், ஒண்டிடுமாறுநாளுறுதியாய்ச்சாவானே சகூ

உறுதியாம்பித்தமுடம்பிளப்பதாகும், பொறையாகத் தூலிக்கிற்போவான்மதியொன்றில், அறுதியாமையகல்லத்தியுலர்ந்தே, உறுதியோர்மதியிலொடுங்கிடுஞ்சீவனே ருய

சாகாக்குறியும்-சாகுங்குறியும்.

சீவகளைபாய்ச்சேர்ந்திடுநாடியில், ஆவக்காம்லைத்தமுத்திடின் மேலேறும், தாவொத்துமேனேக்கிற் சாகாரேனருநாளும், பாவொத்துக்கீழ்நோக்கிற்பதையாமற்சாவானே ருக

அமிர்தமுண்டுஞ் சாகுதல்.

பதைக்கின்றமூவரிற்பக்குவம்தப்பியே; நிதைக்கின்றவாதமும்பித்தமும்நீங்கிடில்; சுதைக்கொண்டிருந்தாலும்தோற்றியவுயிர்விடும், பிதைக்கொண்டவாதபித்தமும்பெலனுமே ருஉ

கைவிடுங்குறிமுதலியன.

பித்தமடங்கினற்பேசாதேபோய்விடு, எத்தியவையமெழும்பிடிற்கிட்டாதே, எத்திபவாதமெழுப்பின்மருந்துசெய், எத்தியிம்மூன்றினியல்பையறித்திடே ருங

சாகாக்குறி சாகுங்குறி.

அறிந்திடிம்மூன்று மடங்கியே முட்டிலும், எறிந்துமிகவோடி
லு மெய்தாதுசாவுதான், பறிந்துநற்றுதுப்பற்றற்றுக்கீழ்நோக்கில், ம
றிந்தேயுயிர்சென்று மறலிகைப்புக்குமே. (௫௪)

மகாதோஷக்குறி.

புக்கியுந்தியிற்கை பொருந்தவொருவிரல், எக்கியுயாமெழும்பி
ன்மகாதோஷம், அக்கியவுந்திதாளுதாரம்வாய்விற்கு, வைக்குந்தலமெ
ணவகுத்தனர்தாதிதே. (௫௫)

தசநாடிகளிருப்பிடம்.

தாதுமுறைகேடணித்தகுதிச்சந்தோ, டோதுறுகாமிய முந்திநெ
டுமார்பு, காதுநெடுமூக்குக்கண்டங்காம்புருவம், போதுறுமுச்சிபுகழ்
பத்தும்பார்த்திடே. (௫௬)

சாகாக்குறி சாகுங்குறி.

பாற்கிற்றசநாடி பதைப்புண்டாய்நின்றிடில், எற்கிற்சிலநாளிரு
ப்பாளிறந்திடான், காக்கிடுங்காமியங்கழன்று சுழித்தோடி, ஆர்க்கி
லெமனுலகடைவதுண்மையே. (௫௭)

உமிழ்நீர்க்குறியாற்சாவு.

உண்மைகேளின்னுமுமிழ்ந்திடநோயுள்ளோன், தண்மையாய்த்
தூரம்போய்த்தாக்கிடிற்சாவில்லை, கண்மையாம்வாயிற்கழன்றிடிற்கிட்
டிடும், வண்மையாய்ப்பார்க்கவகுத்தனர்கதியே. (௫௮)

வாயுநோய் சுரம் திரிதோஷம்.

வகுத்தமுறைப்பாடு மந்தத்தால்வாயுவாம், மிகுத்தநல்வாயுவால்
விளைந்திடுநோயெல்லாம், பகுத்திவையிரண்டாற் பாரச்சுரமுறும், மு
குத்திவைமூன்றுமுத்தோஷங்காணுமே. (௫௯)

மந்தம்வருதல்.

காணுமேமந்தங் கவனிக்குமன்னத்தால், காணுமேமந்தங்கடுமா
மிசமீறில், காணுமேமந்தங்கலந்தமாப்பண்டத்தால் காணுமேமந்தங்க
ருமேதிப்பாலுக்கே, (௬௰)

மேவியவன்னத்தால் விளங்கியதிச்சடம், பாவியேகொன்றுபழி
புறுமன்னந்தான், ஆவின்மிதந்தப் பிலேயுற்றுநோயாகும், காவிலிவை
யெல்லாங்கண்டுகொள்ளன்னமே. (௬௧)

அன்னம்பிறந்ததனைத்துவிதையிலும், மன்னியவெட்டை மகாசீ
தமிரண்டினால், பன்னியறிந்திதைப்பார்ப்பார்பெரியோர்கள், கன்னி
மயக்கத்தாற்கண்டிடுமேகமே. (௬௨)

மேகம்பிறக்கும்விதம்.

மேகம்பிறந்தவிதஞ்சொன்னாரெங்நந்தி, ஆகமிளங்தைப் பருவத்தில்மோகித்துப், போகந்தினஞ்செய்யிற் புகழ்மந்தத்தேகூடில், வாகப்பசியால்வழங்குஞ்சையோகமே. ௬௩

சையோகஞ்செய்யத்தனித்தசுழியோடும், ஐயாவமிர்தமடங்கிக்கணமேலேறும், மெய்யாகவிந்து விழவிழப்புண்ணாகும், மையானமேகம்வளருங்கிரந்தியே. ௬௪

சீமேகம் வாயுச்சூலை பலமேகம் பலநோய்,

கிரந்தியிரணங் கிளர்ந்திடுஞ் சீமேகம், உரைாந்திவையிரண்டாலுறுவாய்வுசூலையாம், பாந்ததிவைமூன்றாற்பலபலமேகங்கள், துரந்திவைதொட்டுச் சூழ்நோய்களுற்றதே. ௬௫

இலங்கனமிடுதல்.

உற்றசுரத்துக்கு முறுதியாம்வாய்வுக்கும். அற்றேவருமட்டுமென்னத்தைக்காட்டாதே, முற்றக்கனல்சுரமுன்வழியேவரில், ஓத்தேநிறைந்தோடிலொன்றுமஞ்சாதே. ௬௬

காயசித்தி,

அஞ்சியுகத்திலழியாமற் காயந்தான், மிஞ்சியகற்பம் விளம்பினோநூற்றெட்டுத், தஞ்சமுறவேதான்றின்ன வல்லோர்க்குப், பஞ்சுநரைபோய்ப் பதிந்தோங்கிவாழ்வரோ. ௬௭

வளமானபித்தத்தின் மருவிக்கபங்கூடில், தளமானவாயுவாற்றானேவெதுப்பேறிக், களமானகன்னத்திற்கட்டியேமூலமாம், உளமாஞ்சுரத்திலுறுகின்றவாயுவே. ௬௮

மலசலக்கட்டு மேல்மூச்சு இரண்டும் உருத்திரவாயு.

வாயுவினாலே மலசலங்கட்டிடும், வாயுவினாலேவாங்கிடுமேன்மூச்சு, வாயுவினாலே மலருமிரணங்கள், வாயுவினாலேவருமுருத்திரரோகமே. ௬௯

பேசிக்கொண்டிருக்கையிற்சாகுதல்.

ரோகங்கபத்தினுழைந்தேறிவாயுதான், வாகுறசிநெஞ்சில் வலித்தேமயக்கிடும், போகுற்றபித்தத்தைப்போக்காமற்றம்பித்துப், பாகுற்றுப்பேசையிற்பதையாமற்கொல்லுமே. ௭௰

சுகசன்னி.

பதமாஞ்சுகசன்னிபாயும்விதங்கேளு, நிதமாக மூழ்கி நிறையவே சாப்பிட்டுக், குதமாகமந்தத்திற் கூடிடில்வாயுவால், அதமானபோகமணைந்திடிற்சன்னியே. ௭௧

வியர்வை கண்சிவப்பு மகாதோஷம் காயமழிதல்,

சன்னிசுகத்தினாற்றானேறும்வியர்வைதான், கன்னிசுகத்தினாற்கண்கள்சிவப்பேறும், வன்னிசுகத்தினால் வழங்குமகாதோஷம், அன்னசுகத்தினாலழிந்திடுங்காயமே. ௭௨

மூலம்.

காயத்தின்மூலங் கண்டவிதங்கேளு,பாயொத்தபனம்பரிந்தே யடக்கினும், மாமைமயக்கமலத்தையடக்கினும் ஓயுற்றகுண்டலிக்குட் புகும்வாயுவே. எ௩

முளைமூலம்.

வாயுபுகுந்துமலத்தோட்பானத்தைத்-தேயுவைக்கூட்டித்திரட்டிக்கருக்கிடும் -தோயுமலம்வரிற்சுருககிமுன்னேசின்- ருயுமுளைபோலபானனிருக்குமே. எ௪

இரத்தமூலம்,

இருக்குஞ்சிலமூலமெழுமண்டலம்போல மறுக்கரணங்கொண்டுவருகுஞ்சிலமூலம் - உறுக்கியவாயுவா லுதிரமுந்தான் கூடித்-தலுக்கிவிழுக்காட்டுந் தான்ரத்தமூலமே, எ௫

பசிகெடும் விந்துநாசம் இளைச்சல்கழிச்சலாம்,

மூலமெழுந்திடின் முன்னேபசிபோகும் மூலமெழுந்திடின் மூனவிந்துநாசமாம்மூலமெழுந்திடின் மூழுங்குமிளைச்சல்தான்மூலமெழுந்திடின் மூகியாக்கழிச்சலே, எ௬

கிராணிக்கழிச்சலில் ஆறுவிதம்,

கழிச்சல்கிராணிக் கழியும்விதங்கேளு அருச்சியபித்த மனல்வாதமையமாம் செழுச்சியவாயுசேர்ந்திவைமூன்றால் பழிச்செனப்பேதிக்கும் பார்பெலம்போகுமே, எஎ

பெலமானமேகத்திற் பிறந்ததொருபேதி - குலமானமூலத்திற் கொடியதொருபேதி, சலமானவாயுவிற்சங்கித்தொருபேதி -வலமானவாறும் வகுத்தமுறையாமே, எ௮

பித்தமேகநிறக்குறி,

மூறையானமேகமுழங்குமிருபதும்-துறையானதெல்லாஞ் சொன்னொசந்தி, கறையாகுஞ்சிலையிற்கண்டிடின்மஞ்சள்போல் - பறையானபித்தத்தாற் படுகின்றமேகமே, எ௯

வாதமேகவையமேகநிறக்குறி,

படுகின்றசீலைதான்பாங்காம்வெளுப்பாகில்- அடுகின்றவாதந்நாலாகுங்காணும்மேகம்-மடுகுங்கபீனத்தின்மயினிறம்போற்பட்டால் விடுகின்றவையத்தால் விழுகின்றமேகமே, ௮௰

தமரோரிமேகம்நீர்த்துளிமேகம்,

மேகமிவைமூன்றில் வெவ்வேறுகுணங்கேளு-வாகிய பித்தமும் வாயுவுங்கூடிடில் - தாகியநாளத்தமரிலெரிந்திடும் - போகுநீர்கட்டிப் பொசித்தூளித்தெறிமும், ௮௧

சிக்காநீர்மேகம்-கல்லெரிப்பு மேகம்,

விழுகுஞ்சிலநேரம் விடுபட்டுநீரோடும் ஒழுகியவாயுவு மொதுங் கிடினேகாது-வழுகியமந்தத்தால் வாயுவங்தேபுகில்-கழுகிழுதிர்ந்திடு ங்கல்லெரிப்பாகுமே. ௮௨

மேகமிகும்-மேனிகருகும்-தாதுநஷ்டமாம்,

ஆகியவாதமும் வாயுவுங்கூடிடில்-த்தாகியவெள்ளைதடையற்றுமெ த்தவாம்-போகியமேனிபொருமிக்கறுப்பேறும் - வாகியதாதுவழங்கா துநஷ்டமே, ௮௩

வெளியாக்காறு தெலும்பாயிருமிடு மேகம்.

வழங்கியவையமும் வாயுவுங்கூடிடில்-பிழங்கிப்பொசியாதுபிற வெள்ளைக்காறுது-தழஙகியிளைத்துத் தானஸ்திபோலாவான் இழங்கி ப்புகைநதே யிருமிடுமேகம். ௮௪

இரும்பியபித்தமும் வாதமுங்கூடிடில்-மருவச்சலமேகம் வாரிதி போலாடும்-உருவம்வேறுக்கு மூண்டவுடற்காய்ந்திடும் - உருகவேயூ லேடுதிஞ்சியினிக்குமே. ௮௫

மதுமேககுணம்,

இனிக்கின்றவாதத்திடைசேரிலையந்தான்- பணிக்கின்றகள்ளுப்ப தனிபோனீரோடும்-கனிக்கின்றமேனிகனாந்து வெளுப்பேறும்-தனிக் குமதுமேகந்தப்பாதேயையமே, ௮௬

இரத்தமேகம்

ஐயமும்பித்தமுமணைந்திடுங்காலத்தில்- கொய்யுறுமிரத்தங் கொ ப்புளிக்குந்தண்டின்-மையுறுங்கண்ணுட்கு மகத்தாம்பெரும்பாடாம் வையுறுமேகம் வரிசைமுறைகேளே, ௮௭

முறைகேட்கிலொன்பது முயற்சியால்வந்தது-துறைகேட்கிற் ச டலத்திற் றுவக்கியமேகங்கேள் நறைபூத்தகொங்கையா ளையகன்மோ கத்தால்-மறைபோற்றுங்கர்ப்பத்தில்வளர்ந்ததுமேகமே. ௮௮

வளர்ந்ததுகர்ப்பத்தில் வகுத்தமுறையஞ்சாம்-உளர்த்திய வுந்தி யிலுற்பத்தியாமேகம்-அழுந்திப்படும்வெள்ளை யாகாச்சுரமேகம்-தளர் ந்திட்டவஸ்தியைத் தணலாயுருக்குமே, ௮௯

தணற்காயுமேகந் தண்ணீர்ப்பகைமேகம் - உணக்காண்முழுக்கற் றுவுருகுஞ்சிலமேகம்- பிணக்காற்பசிகெட்டார் பெற்றபெருமேகம்- வணக்காற்கசயோகத்தால் வருங்கடுமேகமே, ௯௰

கடும்பசிதோணிடிற் காணுஞ்சிலமேகம்-அடுவுற்றபாஷாணத்தா லாஞ்சிலமேகம், அடுவுற்றிறையேரு மஞ்சுமுன்னொன்பதும் எடுவுற் றிருபத்தொனறேற்றினர்மேகமே, ௯௧

## பித்தகுன்மம்.

ஏற்றியகுன்மம்எழுந்தவிதங்கேளு - தோற்றியபித்தமும்வாயுவுந் தொந்திக்கில்-சேற்றியவன்னஞ்செரிக்கில்வலிப்பேறும்-மாற்றியநீருதி வூந்தியாம்பாருமே. ௰௨

## வாதகுன்மம்.

பாருமேவாதமும்வாயுவுங்கூடிடில்-ஒருமேகும்பியி லூழன்றுமிக நோகும்-கோருமேகுத்துங்குடலைமுறுக்கிடும்-வாருமேவாதத்தில் வழங்கியகுன்மமே. ௰௩

## ஐயகுன்மம்.

வழங்கியவையமும்வாயுவுங்கூடிடில்-தழங்கியவன்னத்தைச்சந்திக்கவொட்டாது-புழிங்கியவன்னம்புளிப்புக்கொடுத்தேறி-உழங்கிமுறுக்கியுடலைவலிக்குமே. ௰௪

## மேககுன்மம்.

வலிக்கியமேகமும்வாயுவுங்கூடிடில்-பலிக்கியமல்சலம் பதையாமற் கட்டிடும்-இலிக்கியவிடப்புறமியல் பாம்வலப்புறம்-வலிக்கும்முறுக்கும்வருஞ்சூலைக்குன்மமே. ௰௫

குன்மமிவைநாலில் கூறினொண்விதம்-வன்மையாநோய்க்குமகா நோய்காண்பொல்லாது-கன்மமேசெய்தகடத்துக்கிதுவெய்தும் - நன்மையாந்தர்மஞ்செய்நாட்டோர்க்கும்வாராதே. ௰௬

## பித்தசூலை.

நாட்டியபித்தமாஞ்சூலைமுறைகேளு-மாட்டியவன்னம்ருசிகெட்டு வூந்தியாம்-ஆட்டியகைகாலதன்சந்துபின்றண்டு - நீட்டிவலித்துநிலையாயெரியுமே. ௰௭

## வாதசூலை.

நிலையானவாதத்தி னின்றிடுஞ்சூலைதான்-குலையானகைகாற்குளை ச்செல்லாம்புண்போற்-கலையாய்வலித்துக்கனத்திடுங்கீழ்வயிறு - தலையானமேனிதானிளைத்திடுமே. ௰௮

## ஐயச்சூலை.

இளைத்திடுமேனியிருமிவாண்டிடும்-குளைத்திடுகைகாற் குத்திமிக நோகும்-தளைத்திடும்மார்பிற் சளிமிகத்தாக்கிடும்-அளைத்திடுமையத்தாலாகாதசூலையே, ௰௯

## வாதபித்தசூலை.

ஆகாதவாதமும்பித்தமுஞ்சூலையாய் - வாகானகைகால்வளமாய்க் காடேறும்- தாகானமேனிதனில்வெடிப்புப்புண்ணும் - போகாமனின்றுபுணர்ச்சியாய்க்கொல்லுமே. ௨௰

ஐயபித்தசூலை,

கொல்லியவையமும்பித்தமுங்கூடிடில்-மல்லியெலும்பில் வளமாய்க்கொள்ளைத்தநோய்-அல்லிச்சுரங்காயு மதிகதாபமுமாகும்-எல்லியிருமிடுமிதுகாணுஞ்சூலையே. ௱௧

ஐயவாதசூலை.

காணுமேயையத்திற்கனவாதசூலைகேள் - பூணுங்கபாலம்புடைத்துவெடித்திடும்-ஆணிமுளையாமடங்காக்குளிர்சுரம்-பேணியெலும்பெலாம்பெலன்கெட்டுபோமாறே. ௱௨

ஆறுவகைச்சூலையிலமூன்றுபேர்சொல்வார் - வேறுமிதையல்லால் வெவ்வேறுமொன்றில்லை - கூறுமிதனுமங் கோடிகுணஞ்சொல்வார்-பேலுமறுசூலைப்பேர்சொன்னார்நந்தியே, ௱௩

ஆறுவிதகர்ப்பநோயால் ஸ்ரீமலடு.

நந்தியுரைத்ததுநலமானகற்பத்தில் - அந்தியநோய்தான்ஆறுவகைகேளு-புந்தியில்வாயுவுந்தேயுவுங்கூடிடில் - மந்திமலடாவாள்மாணவனைக்கென்னே. ௱௪

மலட்டுப்புழுவால் மலடு

வளையானகர்ப்பத்தின் மலட்டுப்புழுவிருந்து-விளையாஞ்சுக்கிலத்தைவிளைந்ததுவுண்டிடும்- களையாமலடியாங்காணதைப்போக்கிடில் துளையானபிள்ளைசுகமாய்ச்செனிக்குமே. ௱௫

செனிக்கின்றபிள்ளைத்திறமாய்ப்பிறக்கையில் - கனிக்கின்றசீநீர்கலந்துள்ளேசிக்கிடில்-பனிக்கின்றகைகால் பாவியேகுத்திடும்- தனிக்கும்பசிபோகுந்தான்வயிறும்பாரிப்பே. ௱௬

பாரியவாய்வுபறிந்துகுழிப்புகில் - தாரிக்கழிந்துசதரித்தங் கூப்பிடும்-வாரியுடம்பெலாம்வலிக்குமிடைநோகும்- ஆரியன்சொன்னனதிந்தவன்சித்தனே. ௱௭

சித்தானகர்ப்பத்திற்சேர்ந்திடுமிரத்தந்தான்-மத்தாயுருண்டு வாயுபோலோடிடும்-உற்றபசிபோகுமுழன்றேயினாந்திடும் - வற்றுக்கழிச்சலாம்வன்சூதகவாய்வே. ௱௮

சூதானமாமிசஞ்சுழித்திடிற்கர்ப்பத்தில்-வாதானமேகத்தால்வழங்கிச்செனிப்பிக்கும் - போதாமுடம்பெலாம்புண்போன்மிகநோகும்-நீதாமயக்கமாய்நிர்ச்சீவனாவனே. ௱௯

ஆகின்றநோய்களறுவிதங்காண்கற்பத்தில் - பாசொன்றிமின்றூற்பனிபாதுகர்ப்பந்தான்-வாகின்றதைப்போக்கில்மலடிபெறும்பிள்ளை - ஆகின்றபேர்க்கெல்லாமறைந்தமுறைபாரே, ௱௰

## கற்பசன்னிகுணம்.

அறைந்திடச்சன்னிகளாகாதுகர்ப்பத்தில்-இரைந்திடுஞ்சியினுட் புகும்வாயுவால்-விறைத்துமிகவெயர்க்குமெய்யின்மயக்கமாம்-துறந்தி டும்பற்கிட்டுஞ்சோம்பிக்கும்பாருமே. ௧௧௧

பாருமேபெண்டான்பச்சுடம்பாங்காலம்-தாருமனுபோகந்தனிக் காடியுண்ணுதல்-ஆருக்குமாப்பண்ட மாகாதுமாங்கனி-கோருமேகொ ண்டிடிற்கொண்டிடுஞ்சன்னியே. ௧௧௨

கொண்டமலடிக்குக்கூறிடுஞ்சன்னிதான் -மண்டியிருக்கையின் மாத்தின்பாள்மோருண்பாள் - தண்டியவீணவாள் தனிச்சூதக்காயதின் பாள்,ஒண்டியபெண்களுக்கோரெட்டுச்சன்னியே. ௧௧௩

ஓரெட்டுச்சன்னியுழன்றதுபெண்ணுக்கும் - வாரெட்டுமாணுக்கு மகத்தாஞ்சுகசன்னி-நேரிட்டுபார்க்கினிகழ்ந்ததுவெவ்வேறு-பாரெட்டு மெச்சப்பகுத்தமுறைபாரே. ௧௧௪

## கண்ணோய்.

பாரோபொடிச்சுடல்பருவெயின்மேற்படல்-வாரோறுகொங்கையாண் மாயைமிகச்செய்யல்-காரோமுழுக்கறல்கண்ணாலனல் பார்த்தல்-சீரோறு பாஷாணந்தின்றதாற்கண்ணோயே. ௧௧௫

கண்ணோய்வருகின்றகாரணமின்னுங்கேள்-பண்ணனமேகத்தாற் பருவெட்டைவாயுவால்- தண்ணமலக்கட்டால்தண்சலக்கட்டினால்-பு ண்ணுமிரணத்திற்போடுங்காரத்தாலே. ௧௧௬

காரச்சுறுக்காற்கடுமிரசத்தூமத்தால் - நேரொத்தசாரநிறைமூக்கி ன்வாசத்தால்-பாரொத்தபேதியாற் பலபலதண்ணீரால்-சீரொத்தகண் ணிற்சிறக்கும்வியாதியே. ௧௧௭

## குட்டநோய் பதினெட்டானகாரணம்.

வியாதியுண்மூவாறுவிளங்கியகுட்டங்கேள்-சுயாதிக்கிரந்திசுறன் மேகத்தாலாறும்-பயாதியாமண்ணுணிப்பல்வண்டினாலெட்டுவியாதிப் புழுநாலாய்நின்றிந்தக்குஷ்டமே. ௧௧௮

## கண்ணோய்க்குமருந்து.

இந்துப்புதிப்பிலியியல்பீதரோகணி-நந்திப்பூச்சாற்றினயந்தேய ாத்திட-அந்தகன்கண்ணுக்கருந்திநிதோன்றிடும் - நந்திக்குநாதனயக் துரைத்திட்டதே. ௧௧௯

## சுரம்தோஷம் சன்னிவாயு கர்ப்பசூலைதீர.

உரைத்தசுரம்போமுறவானதோஷம்போம்-விரைத்திடுசன்னிபோ மேலானவாயுபோம்-பாத்தியர்கர்ப்பத்திற்பாய்கின்றசூலைபோம் - கு ரைத்தநற்சூதக்குருக்கூட்டிப்பார்த்திடே, ௧௨௰

## மேகநோயிருபத்தொன்றுந்தீர.

பார்த்திடுமேகம்பகரிருபத் தொன்றும்-போற்றிடுமெய்பிரகப்பொ லிவானசிந்தூரம்-சேர்த்திடுஞ்சீந்திற்செவ்வாஞ்சருக்கரை-மாற்றிடுவெ ண்ணெயின்மாமேகம்போகுமே. ௧௨௧

## குன்மம் குஷ்டம் கிராணிமூலந்தீர,

போகுமேகுன்மம் புகட்டத்திராவகம்-போகுமேகுஷ்டம்புகட்ட ச்செயகெந்தி-போகுமேகிராணிபுகட்டநற்பூகைம்-போகுமேமூலம்பு கழ்சங்கைச்சேம்புக்கே. ௧௨௨

சங்கைகேளேய்தான் தனித்தநாலாயிரம்-சங்கைகேணூற்றிரு ற்பத்தெட்டென்பர்காண் - சங்கைகேளிவ்வளவுந்தானுடலிலுண்டாகி ல்-சங்கைகேளெல்லாந்தவிடுபொடியாமே. ௧௨௩

## சகலநோய்களுந்தீர குருச்சிந்தூரம்.

பொடியாநோய்போகப் புகன்றிட்டாரெங்கந்தி-மடிவர்னசூதமக த்தானதங்கம்-பிடிவானகெந்தியின் போரானசத்து-குடியாய்ச்சிந்தூரித் துக்கூட்டியேதின்றிடே, ௧௨௪

இன்றிடநோயெல்லாந்திசை கெட்டேயோடிடும்-பன்றிடவாயுவு ம்பக்கத்திற்சேராது-தன்றிடலோகர்க்குத்தாஞகாதிம்முறை-மன்றிடச் சித்தர்க்குமாவியாதியோகவே, ௧௨௫

வியாதிகள்போகவெகு நாட்சடமுறப்-பயாதித்திரைநரைபாங்கா த்தவிர்ந்திடக்-கயாதிக்கவனங்கலங்தெங்குஞ்சுற்றிட- அயாதியாஞான மஞ்சாகுஞ்சித்தியே, ௧௨௬

## திருமூலநாயனூர் அருளிச்செய்த

## குணவாகடம் முற்றிற்று,

கடவுள் துணை.

—*—

அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த

# வைத்தியசாரம்

## கணபதிதுதி.

வெண்பா.

சொல்லியவயித்தியசார சுருக்கமுப்பத்தாறும்
அல்லும்பகலு மறிவுணர-நல்ல
குணபதியாம்பூரணத்திற் கூடியேவாழும்
கணபதியின்பாதமலர் காப்பு.

### மருந்துகொடுக்கக்கூடாதபேர்கள்.

அன்னியதாரத்தாசைகொள்வோன்வஞ்சனைகஞ்சாகள்ளுலொட்டிலுண்போன்றீமை, துன்னியசூனியக்காரன்சண்டைக்காரன்-துரும்புகிள்ளிவிருந்துண்பான்திருடன் துஷ்டன், குன்னிய நித்திரைமிகுத்தோன்கொடாதலோபி, குணமில்லான்மதியில்லான்மானமில்லான் - பன்னியபண்டிதர்பகைஞன் செவிடனூமை, பாசுபதமறியானைப் பார்க்கொணுதே. (க)

### முன்னே பணம்வாங்கிக்கொண்டு பின்னே வைத்தியஞ்செய்யவும்.

கைக்கூலிகையொப்புக்களவின்கூலி கபடமனமுலைமாதர் வேசிகூலி, மெய்க்கூலி கண்கூலி வித்தைக்கூலி வியாபாரக்கூலிமிக வுடையான்கூலி, ஒப்பரியபிணிதீர்க்கு மொருவன்கூலி, ஓதுவிக்குமுபாத்தியாயன்றன்கூலி, அப்போதைக்கப்போதேவாங்காராகில், ஆர்பெறுவாராார்தருவாரவனிமீதே. (உ)

### துஷ்டர்களுக் கிம்மூன்றுஞ் சொல்லக்கூடாது.

மந்திரமும்வாகடமும்பழையநூலும் - வருவிக்கும்பெரியோரேவளமைமிகேளீர், தந்திரமாய்க்காந்தமுகமுசிபற்லுந் - தன்மையதுபோற்றொடர்ந்து தரிப்பாராகில் - சுந்தரமாம்புகழுடைய குலமானலுந்,

துஷ்டர்களுக்கிம்மூன்றுஞ்சொன்னாகில்-அந்தாமாஎழுநாகிலழுந்தி ப்பின்னு, மறிவிலாச்சண்டாளராவார்பாரே (௩)

இந்நான்குவகைகளும் அறியாமல் வயித்தியஞ்

செய்பவர்களுக்கு நரகம்வரும்.

பார்க்கின்றசோதிடபிராயகாலம் பகரும்விபகாரமொடு பிராயச் சித்தம், ஏற்கும்வைத்தியமிவைகள்நான்கும்வல்லோர் இதன்வழியே சிகிச்சைசொகைக்ஷசெய்வாராகில், ஆர்க்குமேதோஷமில்லை யிவைகளை யா - அறியாதாாசாஸ்திரவல் லவர்கள்போல, திர்க்கமடி பிடியாகச் செய்வாராகில், சிவபிரமத்திவதைசேர்வாரன்றே, (௪)

கண்கள்-௩-தலைகள்-௪-முகங்கள்-௫-கைகள்-௬-சரீரங்

கள்-௮-கால்கள்-௰-இந்தஆறுவிதகுணங்களறியார்

ரோகிகளைக்கொன்றதனல் நரகமடைவார்.

வாதுகுறிவைத்தியரோசொல்லக்கேளீர் - வாகாககண்மூன்றுதலை கணான்கு, நீதமுடன்முகங்களைந்துகைகளாறு -நிலைசரீரங்களெட்டுகா ல்கள்பத்து,வீதமிதன்பயனறிந்தார்வியாதிதீர்ப்பார், விதமறியார்மா னிடரைப்பழியேசெய்வார், சேதமாஞ்செய்மருந்துபலித்திடாது, செ த்தபின்பு நிரகிற்சேருவாரே. (௫)

கண்-தலை-கை-சரீரம்-கால்-பிண்டநிலைவிபரங்கள்.

மருந்துசுத்திகுணம்நிகண்டுகண்கள்மூன்றும் -வாதபித்தசிலேஷ் மதொாதந்தலைகள்நான்காம், அருந்தும் அறுசுவையறிதல் கைகளா றும் அஷ்டவிதக்குறியறிதல்சரீரமெட்டாம்-இருந்ததசநாடிதசவாய்வி ரண்டும், இதமாகப்பார்த்திடிற்கால்கள்பத்தாம், பொருந்தியதோர்பி ண்டநிலைமுகங்களைந்தாம் பொதிகைமலையகஸ்தியனார்புகன்றவாறே.()

வாகடத்தின்பயனறியார்நாடிகாணார்-வளர்கையைப்பிடித்திமுத் துவார்த்தைசொல்வார், ஆகடியமாகவேநல்லோர்தம்மை - அசாத்திய நோயோமொன்று அறைந்துபோவார், பேர்கிடக்கப்பேர்சொல்வார்வி யாதிகட்குப்-பிணிதீர்ப்போமென்றுசொல்வார்தீர்க்கமாட்டார்.ஓகோ கோவைத்தியர்தாமென்றுசொல்வார்க் - கொருக்காலுமோக்ஷமில்லை ந ரகந்தானே. (எ)

அச்சமறவைத்தியரே நோயுள்ளோர்க்கு-அசாத்தியமுஞ் சாத்தி யமுமறிந்துநன்றாய், பட்சமறக்குறிகுணமெய்ப்பரிசுபார்த்து-பரி காரமாய்மருந்துபகராராகில், தச்சமறக்கிளைகுலங்கள்வேரோடற்றுத் தாணிதனில்வெகுபாவந்தலைமேற்கொண்டு, இச்சமெபெறவெழுநாகில ழுந்திப்பின்னும்-ஈடேற்றமில்லாமலிருப்பர்தானே (அ)

தாணிதனிலவுஷதத்தின்சுத்திகண்டு-தகமைபெறநோயாளி சரீரம்பார்த்து, காரியாசனவகையுங்கண்டுபின்னுங் - கைப்பரீக்ஷைமெய்ப்பரீக்ஷை கருதும்நாடி,திரிகரில்குருமுகமாய்ப்புத்தியாகித்-தெளிந்தோர்கள்யோசனையுஞ் செய்திகேட்டு - மூரணியினுமிந்தவகைசெய்யாராகில்-மூவேழுசுற்றமும்வே ரற்றுப்போமே, (௯)

கருத்துறவேவாதிமகன் வைத்தியஞ்செய்யில் கசடறவேநோயாளிகுநவாயெண்ணி- கருத்துறவேமருந்துக்குப்பத்திவேணுங்கைகண்டவைத்தியனையறிந்துநன்றாய், கருத்துறவேமனதுவாநடக்கவேணுங்-கழுதையைப்போலிருந்தவர்க்குப்புலியாதொன்றுங் - கருத்துறவேயிவையறியச்சித்தர்தானுங்-காட்டினரவர்மனம்போல்நடந்துகொள்ளே.

நடந்துகொள்ளுநோயாளிராஜாவாக-நாட்டினலவர்க்கங்கேமருந்தூணுது - தொடர்ந்துமேயவரிடத்திற்பத்திவைத்தால் துரும்பாகப்போகுமடாநோய்களேது-அடர்ந்துபோயவர்வாசல்காத்தாராகில்-அக்கினியிற்பஞ்சதுபோல் நோய்கள்போகும்-சடந்தனக்குநோய்வந்தால்குருவேயென்பார்-சாதுரியமாய்த்தீர்ந்தால் தம்பியாமே. (௧௧)

தம்பியென்பார்நோயெல்லாந் தீர்ந்தபின்பு தாய்தந்தைகுருவென்பார்தீருமுன்னே - வெம்பியதோருரோகங்கள்தீர்ந்தபின்பு- வேணவுபசாரம்பின்னுகட்டேன்பார் - கும்பியேகொதித்துமிகவுள்ளம்வாடி குருவானவைத்தியர்தன்மனதுநொந்தால் - சம்பியேமுகம்வாடித்தான்வரார்கள் சாற்றினேனிவையறிந்து மருந்துவாங்கே, (௧௨)

வஞ்சமற்றுவொன்றபிணியாளர்தம்மை-மகவதிலும்பதின்மடங்குமருந்துசெய்யில் - நெஞ்சில்நோயாளியின் யிணிபிதானம் - நீறுத்துமந்தவைத்தியர்க்குநிதிகொடாமல் - பஞ்சைமொழிபகருமரும் பாவிப்போரைப்பாழ்நரகிலழுத்தியெமன்பாசத்தாலே,அஞ்சவிழுந்தேயடித்துத்தள்வானென்று - அகஸ்தியருமுந்நூலிலருள்செய்தாரே. (௧௩)

### பிண்டஉற்பத்தி.

கேளப்பாமனமானவாயுகூடி - கெடியானசித்தமாகாயம் பொருந்தி வேளப்பாஆங்காரசிகாரமிஞ்சி - மேவுதற்குப்பெண்மேலேமோகமாகும்-நாளப்பாஐந்துக்கும்பலமேதென்றால் நலம்பெறவே சொல்லுகிறேனன்றாய்க்கேளு, தாளப்பாமனதோடேயியானென்றுந் தனியானாதத்திலேயானென்றனே. (௧)

தானென்றவிந்துவினிற்சமானன்கூடும், தனியானசித்தமதில்வியானன்டும், கானென்றஆங்காரம்கர்ச்சிப்போடே கலந்துநிற்கும்உதானனப்பா கண்டுகொள்ளு, வேனென்ற பத்துமொன்றாய்மனதுங்கூடிமேவியவன்கலந்துவிந்து விழுகும்போது, மானென்றமௌனபரவசமேயாவன் மருவுகின்ற பெண்ணுக்கும்முறைதான்கேளே, (௧௫)

கருதரிக்கும் விதம்,

முறையானபெண்ணாணும் மௌனமுற்றால் - மோசமில்லைகருவங்கேதரிக்கும்பாரு - நிறையானவலத்தோடிலாணேயாகும்நேராகயிடத்தோடிற்பெண்ணேயாகும் - உறையானகருப்பையில்சுக்கிலம்பாய-வுத்தமனேசுரோணிதந்தானுறைந்துகொள்ளும்,கறையாகப்பாய்ந்தவெளிதமருபோல்க்-கழற்கொடிக்காய்ப்போற்றிரண்டுசிரசுமாமே. ௧௬

ஆமப்பாசிரசோடேகையுங்காலும் - அப்பனேதத்துவங்கள்நரம்புமூளை - ஓமப்பா அஸ்திமுதலுரோமத்தோடு உத்தமனேபதினொருவாசலுமேகாணும்-காமப்பால்விழுந்தவழிசிரசினாலே-கைமுறையாய்த்தாயுண்ட அன்னஞ்செல்லுஞ், சோமப்பாநடுமையத்தொப்புளாலே சென்றதெல்லாமலமாகக்கழியுந்தானே. ௧௭

தானென்றபதினொன்றாற் சடந்தான்முன்னே - சாதகமாயெடுக்துவருமலடெவ்வாறு-ஊனென்றபெண்ணுக்கு மனதுவேறாய் உருமுற்றகமௌனம்உன்னைப் பாவத்தாலே- சானென்றமலடாவள் புருஷனுக்குங் - கைமுறையாயிப்படிதான்கண்டுகொள்ளு, தேனென்றமொழியாட்குப்பரனார்சொன்னார்-செகமெலாமிப்படிதான் செனித்வாறே. ௧௮

தசவாயுகளின்பெயர்-பிராணவாயுயிருப்பிடம்,

பிலத்துநிற்கும்பிராணனோ டபானன் வியானன் - பிரியாதவியானன்சமானனொடுன்ர்மன், நலத்துகின்ற நாகனெழிற் கிருகான்றாகும்-நற்றேவதத்தனொடுதனஞ்செயன்பத்தாகும் - இருக்கமுடன்பிராணநிலைமூலமதிற்றோன்றி-யெழுந்துசிரசளவுமுட்டி யிருவிழியின்கீழாய, கலக்கமறநாசிவழியோடும்ஈராறில் -கடுகியெட்டுவுட்புகுந்துகழியுமோர்நான்கே. ௧௯

அபானன்-வியானன்-உதானன்-சமானவாயுகள்.

உந்தியெனுந்தலத்தின்கீழபானனின்று-உறுமிமலசலங்களையுங்கழலச்செய்யும்-விந்தையெழில்வியானன்தோளதனில்நின்று-மிகக்களையு

ந்தவனமுமுண் டாகச்செய்யும்-பிந்தஉதானன்செயலுண் டசனந்தன்னைப் பெருநாடி நரம்புவழியூட்டல் செய்யும், இந்தவுடல்தனைவளர்க்குஞ் சமானன்தானுமியாவையுமேமிஞ்சவொட்டா திருக்குமன்றே.()

### கூர்மன்-நாகன்-கிருகான்-தேவதத்தன்
### தனஞ்சயன்-வாயுகள்.

கூர்மனிருவிழியில்நிமைத்திடுமேநாகன்-கொட்டாவிவிக்கலெனுங்கொடுமைசெய்யும்-தீர்மைகிருகரனீட்டிமுடக்கிவைக்குந் தேவதத்தன்விழித்துமேயசனஞ்செய்யும், பேர்மன்னுந்தனஞ்சயன்மேற் சிரசிண்டாய்ப்பிளந்திடும்போததுவோடிப்போவதாகும்-நேர்மையறிந்திடுவையினிநாடிபத்தின் நிலைமைதெரிந்திடவிபர முனாசெய்வோமே.உக

### தசநாடிகளின் பெயர்கள்-சுழிமுனைநாடி
### இடகலை-பிங்கலை.

சுழிமுனையாம்இடகலைபிங்கலைகாந்தாரி தூயத்திசிங்குவையலம்புடைபுருடன்(ற)னும்-எழுகுருவன் சங்கினியோடீனாந்தாக நின்றதசநாடிபத்தும்நிலைத்தநாம - மொழிவதுகேள் சுழிமுனையென்பதுமூலத்தில் முளைத்துநடுவெழுந்துசிர சளவும்நிற்கும்-பிழிவழியாச்சுழிமுனைபிங்கலைகள்தோன்றிப் பிறந்துயிருநாசியிடமோடிநிறகும். (உஉ)

### காந்தாரி-அத்தி-சிங்குவை-அலம்புடை
### புருடன்-குருநாடிகள்.

கண்டமதில்நின்றுகாந் தாரிநாவில் கனாத்தநீர்பொசியவுபாயங்கள்செய்யும்-அண்டசெவிதனிலத்திசிங்குவைநின்று அவத்தையோர்நாள்கினுக்கும் ஊமைஎன்னும்-விண்டஅலம்புடைபுருடன்இருவிழியில்நின்று மெய்மறந்தபோதுஅசைவாகிநிற்கும்-கொண்டகுருநாடியீ ரலிலேபற்றிக் குடல்புரட்டிவாயில்நீர்சுழற்றிநிற்கும். (உங)

### சங்கினிநாடி-விடையம் ஐந்தின்பெயர்கள்
### வர்ணவிடையம்.

சங்கினியென்பதுநாபி குய்யம்பற்றித் - தானிருக்குமொன்றையுமேமிஞ்சொட்டாமல்- அங்கும்அதிகாரியனுடைம்பத்தொன்றும்அறிவித்தோம்வசனதியைநதுங்கேளாய், இங்குவசனங்கமனந் தானந்தோ

டு இருந்தளழில்விசர்க்கம்ஆனந்தம்ஐந்தில், பொங்குவசனுதியவன்வா கதில்நின்று பொருந்தவசனத்தையவன் பிறப்பிப்பானே. உச

## வியாதிகளை அஷ்டவிதப் பரீட்சைகளாலும்

## நிச்சயித்தறிதல்.

தாணியுள்ளவியாதிதனை யஷ்டாங்கத்தால் தானறியவேண்டுமது யேதேதென்னில்-நாடியதோர்நாடிகண்கள்சத்தத்தோடு-தேகத்தின துபரிசம்வானம்நாக்கு,இரணமலமூத்திரமாமிவைகளெட்டும்இதம்பட வேதான்பார்த்துக்குறிப்புங்கண்டு, பானருளாற்பெரியோர்கள்பாதம் போற்றிப் பண்புதவறுமற்பண்டிதஞ்செய்வீரே. (உரு)

## நாடிகள்நிற்குமிடங்களும் வாதநாடிநடையும் வருதலறிக.

செய்கின்றநாடிபெருவிரலின்மேலாய்-திருந்திழைமூன் றங்குலத் தினடுவதாகத்-தைகின்றகோதும்பையரிசிபோலச்-சர்வம்வியாபித்திரு க்குமதுதான்கூறில்-கையடியுங்காலடியும்நாடிநிற்கும்-கன்னியருக்கிட ப்புறமாங்கணவர்க்கங்கே-மைகின்றவலப்புறமாம்வாதநாடி-வந்துமுகூ னைடக்குமப்பால்வகைசொல்வேனே (உசு)

## பித்தம்-சிலேட்டுமம்-வாதம்-நாடிநடைகள்,

சொல்லுகின்றபித்தநாடி தோற்றுமப்பால்-தொடர்ந்துசிலேட்டு மநாடிதோன்றுமப்பால்-அல்லுநிறக்குழலாளே நாடிநின்றால்-ஆச்சரி யநாடியென்றறிந்துசொல்லு-மல்லுகின்றவாதத்தினடியங்கே வக்கிரக தியாய்நடக்குந்தவளைபோல-நல்லுகின்றமாமியட்டை தெர்ட்டிலாட்ட ல் நல்லாயிப்படிநாடி நடக்குந்தானே (உஎ)

## பயித்தியநாடிநடை-சிலேட்டுமநாடிநடை-வாதமும்

## பித்தமுந்தொந்தித்தநாடிநடை,

நடக்கும்பயித்தியஞ்சவலைப் பிள்ளைபோலும் நடனமயிலன்னம் போற்காகம்போலும், கிடக்குஞ்சிலேட்டுமநாடியிலகுரும்பட்சி செய யபுறாவூர்க்குருவிகோழிபோல, அடக்கமாய்நடக்குமதுமயிலேசொன் னேன் அவ்வளவேவாதபயித் தியத்தின்தோற்றம், மடக்கின்றநாடை போல்நடக்குமிந்தை,மஞ்ஞைதெயனைடக்கு மதுமதித்துக்கூறே (உஅ)

வாத சிலேட்டுமந் தொந்தித்தநாடி

அசீரணநாடி-மத்ரிதயநாடி-ஸ்திரீசங்கைநாடி

மலபந்தநாடி - சன்னுவாதநாடிகளின் வருகை.

கூறுகின்றவாதசிலேட்டுமமுங்கூடில் -கோழியட்டையெனநடக்கும்அசீர்ணநாடி, தூருகின்றமத்திரிதயத்தினுடி- தூங்குகின்றகாகநடையென்றுசொல்வார், தேறுகின்றஸ்ரீசங்கைஇப்படியாய்நின்று-தீவிரமாய்நடக்குமலபந்தநாடி, ஊறுமன்னைம்போல்நடக்குஞ்சன்னிவாதம்-உயர்நாடிவிதிகளையுமுணாக்கக்கேளே, (உ௬)

குடிலை-சூட்சுமவாயு ஜன்னிவாதம்-சங்கினி காந்தாரி

நாடிகளி னடைகளறிக.

உரைத்தவிறகின்கட்டுக்குள்மூஞ்சூறு உலவுதல்போலேநடக்குங்குடிலைவாயு, விரைத்தெழுந்தேமந்தமாயிருந்துபின்னும்விதமாகநடக்குமதுசூட்சுமவாயு, புரைத்தருமைஅவ்வகையின்சன்னிவாதம் பொருப்பாகக்குவிந்தமுலைபோலுங்கொங்கை, முரைத்தெழுந்த சங்கினிகாந்தாரிபின்னே முறைமையதாம் நாடியெனமுனிவர்தாமே (௩௰)

தேகங்களின்-பரிசங்களும்-நிறங்களும்

வருங்குறியறிதல்,

முனைகின்றதேகபரி சத்தைப்பார்க்கில் முன்வாதத்தேகிக்குச்சரீரஞ்சற்றே, அனைகின்றஉஷணமாம்பயித்தியதேகி - கதிகமுண்டாமப்பால்சீ தளமாய்நிற்கும், சுனைகின்றசிலேட்டுமந்தான் சூழ்தேகிக்குத்தொந்தகுணம்நால்விதமாய்நிறந்தான்கூறில், பனைவாததேகநிறங்கறுத்துநிற்கும் பயித்தியதேகநிறமஞ்சள்சிவப்பதாமே (௩௧)

சப்தலட்சணம்

தாமேசிலேட்டுமதேகநிறம்வெளுப்பு தான்தொந்ததேகமிந்நால்விதமாய்நிற்கும், மாமயிலேசத்தமது மறியவேண்டில் வாதரோகிசமதொனியாம்வார்த்தைபேசும், ஈமமுள்ளபித்தந்தானுறக்கக்கூறும் இயம்பிடுஞ்சிலேட்டுமரோகிக்கீனச்சத்தம், நாமுரைத்தோம்தொந்தரோகிக்குத்தானிந்த நால்விதமாய்மொழிந்தசத்தம் நயந்துகாணே ௩௨

காணுகின்றவாதரோகிக்குக்கண்கள் கருநிறமாய்நொந்துமிகத் தண்ணீர்பாயும்-பூணுகின்றபித்தரோகிக்குமஞ்சள் போலிருக்குஞ் சிவப்புநிறப்பொலிவுதோன்றும்- பேணுகின்றசிலேட்டுமரோகிக்குக்கண்கள்பீளைகட்டிவெளுத்திருக்குஞ்சன்னிவாதம்-வாணுகின்றசிவப்புடைத்தாய்வந்துவீங்கி வந்திடுங்காமாலையெனவகுத்துச்சொல்லே ௩௩

## வாதமலம்-பித்தமலம்-கபமலம்-தொந்தமலம்

## வாதச்சிறுநீர்-நிறங்கள்,

வந்தமாவாதரோகிக்குத்தானும் மலமிறுகிக்கட்டுபெட்டுக்கறுத்துத்தோன்றும-சிந்துபித்தரோகிமலமஞ்சளாகில் சிவப்பாகில்சேர்ந்திருக்குஞ்சிலேட்மருக்கு-சொந்தமலம்வெளுத்திருக்கும்மலக்கட்டான தொந்தர்மலம்பலவிதமாய்த்தோற்றிக்காணும்-விந்தமுளவாதரோகி சிறுநீர்தானும் வெளுத்திருக்கும்பயித்தியர்நீர்விதஞ்சொல்வேனே ௩௪

## பயித்தியர்சிறுநீர்-கபநீர்-தொந்தநீர்

## வாதரோகநாவு-பித்தரோகநாவு-நிறங்கள்.

விதமுள்ளபயித்தியர்தன்சிறுநீர்மஞ்சள் விதமுடைத்தாயிருக்குமல்லால் சிவப்புந்தோன்றும்- நுதையுள்ளசிலேட்டுமத்தோர்நீர்தான் மெத்த-நுறைகலக்குந்தொந்தநீர்நால்விதமாய்க்காணும்-சுதையுள்ளநாவினிறஞ்சொல்லில்வாதந் தோன்றினர்க்குவெடித்துமுட்போற்கறுத்திருககும்-கதையல்லசிவந்தாலும் பசுத்தாலுந்தான் கனமுள்ளபயித்தியர்நா கணக்குத்தானே ௩௫

## கபரோகநாவு-ஜன்னிரோகநாவு-தொந்தரோகநாவு,

தானமொடுவாய்வெளுத்து நீருண்டாகிற் ருன்சிலேட்மநாவாகுமீசாம்அற்றே,ஆனமுட்போற்கறுககில்சன்னிரோகநாவாம்அதமதொந்தநாநிறம்நால்விதமாய்த்தோன்றும், ஆனவிவ்வகையெட்டுமறிந்தபேரா அவனிதனிற்பண்டிதராயறியச்சொல்வார், ஈனமிலாப்பொறியடக்கும்பெரியோரன்றி யெய்தாதுயாவருககு மியம்புங்காலே. ௩௬

## அகஸ்தியமுனிவர் - அருளிய

## வைத்தியசாரம்-முற்றிற்று.

கடவுள் துணை.

—*—

அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த

# நோயின்சாரம்.

## கணபதி துதி.

வெண்பா.

கரிமுகக்கடவுளை கௌரிமைந்தனை
விரிகடல்வாயனை வேதவேதாந்தனை
அரிதிருமருகனை யாதிசோதியைப்
பரிவொடுதொழுதவர் பாதம்போற்றுவாம்.

மாதங்களில் நாடிபார்க்குங்காலமறிதல்,

சித்திரைவைகாசிக்குஞ்செழுங்கதிருதயந்தன்னில்- அத்தமாம்ஆனியாடி யைப்பசிகார்த்திகைக்கும் - மத்தியானத்திற்பார்க்க மார்கழிதைமாசிக்கும் - வித்தகக் கதிரோன்மேற்கே வீழ்கும்வேளையிற்றுன் பாரே. (க)

தானதுபங்குனிக்குந் தனதுநல்லாவணிக்கும் - வானமாம்புரட்டாசிக்கும் அர்த்தராத்திரியிற்பார்க்கத்-தேனெனமூன்றுநாடி தெளியவேகாணுமென்று-கானமார்முனிவர்சொன்ன காரிகைவேதநூலே. ()

நாடிபார்க்கிற் பலித்திடாக்காலமறிதல்.

எண்ணெயின்தலையின்போதும் ஈரமாய்நின்றபோதும் -உண்ணும்நல்லுணவின்போதும் உண்டாம்வெம் பசியின்போதுந் - திண்ணமாயநடக்கும்போதுஞ் சிற்றின்பமூட்டும்போதும் - பண்ணியநாடி பார்க்கிற்பலித்திடாதென்றுசெப்பே. (ங)

நோய்நாடி பார்க்கும் விபரமறிதல்.

மருவிடுநோயினடிமதித்திடில் வலக்கைமைந்தர்க்-கரிவையர்க்கிடக்கைதன்னிலமுத்தியேசுட்டிக்காட்டும் -விரலதில்வாதமாகும் மிகுநடுவிரலிற் பித்தந் - தருபணிவிரலில்ஐயந்தானியல்பறிந்துபாரே. (ச)

வாதமும்பித்தமையமருவியகுணபாடத்தைத் - தீதறமுனிவர்நூலைத்தேர்ந்தபின்திரட்டதாக - ஓதியசுருக்கநூலையொழுங்கொடுவுணர்ந்துகொள்ள - வாதுதீர்வயித்தியர்க்குவல்லிருள்விளக்கமாமே, (௫)

மந்தசுரக்குணம்,

வாதந்தான்தனித்துநின்றுவந்திடும்பந்துபோலத்- தீதறவெழும்பிநின்றுற்சிக்கியேமந்தம்பற்றும் - ஏதுவாற்சுரங்கள்கண்டதிடைவிடாதிற்குமல்லால்-தாதுவுங்குறைந்துநின்று தன்னையுமறக்கச்செய்யும். (௬)

மத்தியசுரம்-மேலைச்சுரங்களறிதல்.

உற்றிடும்வாதநாடியொருவிரலுள்ளேநின்று - பற்றியேசிலும்பிநின்றுபையவேநடக்குமாயின் - மத்தியசுரமேயாகும்மேலைச்சுரமதுதானுயின்- அத்தியேமற்றியோடியடங்கிடாதெழும்பிநிற்கும். (௭)

சகலசுரங்களும்-பாஷாணத்தாற்றீரும்.

இப்படிசுரங்கள்கண்டாலெளிதல்லவேகமுண்டாய்-அப்பறாவரண்டநாவினிற்பிளப்புக்காணும் -வெப்புறுமிச்சுரங்கள்மேவிடாதகலவேண்டில் - மெய்ப்படிபாஷாணத்தால் மீள்வதுதிண்ணந்தானே.

வனமூலிகஷாயம்-மாத்திரை கற்கம்-இவைகளாற்றீரும்.

நாட்டினிற்சுரங்கள்கண்டு நலம்படாதிருக்குமாயிற்- காட்டினில்மூட்டியாலுங்கஷாயத்தின்வலிமையாலும்-மூட்டியகுளிகையாலும்முடுகியகற்கத்தாலும்,வாட்டமாமென்றுநூலோர்வழுத்தியகுணமீதாமே

மலபந்தநாடி,

வந்திடும்வாதநாடி மடங்கியேதுடித்துநிற்கில்-முந்திய பழமலங்கள்முடுகியேசிக்குமென்க-அந்தமாய்வாதந்தம்பித்தமிழ்ந்துநின்றசைக்குமாகிற் - பந்தியாய்வயிற்றெரிப்பும் இளைப்பும்வந்தடுத்ததென்னே

மந்தசன்னி.

நீருறும்வாதநாடிநின்றதிற்கோபமானுற் - பாரினிலெவர்க்கும்வாயுபற்றிடுமந்தமாகும்,வேரிசேர்குழலாய்வாதம்விரிப்பொடுயெழுந்துநின்றால்-கூறுறுசன்னிவந்து கூடிடுமூன்றுநாளில். (௧௧)

மேற்படி-சன்னிதீர அண்டத்தயிலம்.

வந்திடுமூன்றுநாளில் வாதமாஞ்சன்னிகூடிற் - புந்தியைமறந்துவாயாற்புலம்பலோடலம்பற்பண்ணும் -பித்தியகாலாகாளிற் பிடரியிற்பின்னல்செய்யும்- அந்தமாகிய அண்டத்தின் தயிலமேபுகட்டிடாயே.()

## தோஷக்குறியறிதல்

பாவியவாதநாடிபக்கமேதுடியாவண்ணம், பரவியபுழுப்போலூர்ந்துபுலன்கெடவதிர்ந்தேயோடில், சரமுறுமேழாநாளிற்றோஷம்வந்தணுகிநாவை, யுரமுறப்பேசவொட்டாதுளறியேகுளறிநிற்கும். கங

## மேற்படிதோஷந்தீர மயிலிநெய்.

பேச்சதுகுளறிநின்று பெருகவுள்மூச்சுமுண்டாம்; ஆச்சுபன்னிரண்டுநாள்தா னப்படிகிடக்கிற்பின்பு, கூச்சறமயிலிநெய்யிற்குலவியவசம்புகூட்டித், தேய்ச்சுமேலுள்ளுங்கொள்ளத் தோஷமுஞ்சிதைந்துபோமே. கச

## வாதமெலிவுதோஷம்.

வாதமேமெலிந்துவிம்மி வரண்டதுபுரண்டுதெத்தி, தேசமாயமீனைவால்போற்சிக்கியேதுடித்துநிற்கில், வாதையேபெருகிமேலில்வந்திடுந்தோஷந்தானென், றோதினோர்முன்னோரிந்தவுவமையைக்கண்டுசொல்லே, கரு

## சர்வாங்கவாதசன்னிக்குணம்.

கூரிட்டவாதநாடி கோழிபோற்கிண்டிநின்றால், வாரிட்டமூலநல்லாளேவாதமாஞ்சன்னியாகும், பேரிட்டதெடுத்தெடுத்துப்பிலப்பட்த்தியங்குமாகில், ஆரிட்டதேகத்துண்டாமதுசருவாங்கமாமே. கசு

## மேற்படிநோய்தீரமருந்து,

பதறியவாதநாடி பாய்பரிபோலவோடிற், சிதறியமூன்றுநாளில் சேர்ந்திடுங்குதிரைவாலி, மதறியாய்த்தொண்ணூற்றாறு நாழியில்மரிக்காவிட்டால், விதரியாய்வேம்பினெண்ணெய் விஷமுஷ்டித்தயிலங்கூட்டே. கஎ

## வாதக்கதிப்பால்வரும்நோய்கள்.

வாதமேகதித்தபோதுவாயுவுமெழும்புங்கண்டீர், வாதமேகதித்தபோது வந்திடுஞ்சன்னிதோஷம், வாதமேகதித்தபோதுவந்திடும்வியாதிமேலும், வாதமேகதித்தபோது வல்லுடல்மெலிந்துகொல்லும். கஅ

## இருநாழிகையிலும் ஒருநாழிகையிலுஞ் சாகுங்குறி.

மந்தமாய்வாதநாடிமயிருறும்பேன்போலோடில், இந்தமானிடற்கிரண்டுநாழிகையிருப்புமில்லை, வந்தவன்முகமுநேர்ந்துமஞ்சளின்நிறமெய்யாகில், முந்தவோர்நாழிகைக்குள் முடிவதுதிண்ணந்தானே. ( )

## தனிவாயுநோயும்-வலிகுன்மமும்-மரணமும்-வருங்குறி.

வாதந்தான் தனித்துநிற்கில் வாயுவுந்தனித்துநிற்கும், வாதந்தானுநறிநிற்கில்வலிகுன்மம்வந்துசேரும், வாதந்தானற்றுநிற்கில் மரணமும்வந்துசேரும், வாதத்தின்கிட்ட செல்லாமிவ்வகைவடிவுதானே (

## கர்ப்பந்தரித்தநாடிகுணம்.

காரிகைதமக்குப்பிள்ளை கருப்பைபையைப்பற்றிநின்றால், கூரியவா தநாடி குண்டலப்புழுப்போலாரும், வீரியமூன்றுதிங்கள் விட்டில் போல்பறைத்துநிற்கும், பாரியயெட்டாந்திங்கள்பையவேபுழுப்போ லாரும். உக

மாதர்கைபிடித்தபோது வந்திடும்வாதநாடி, தீறுறவெடித்துப்பா ய்ந்துசிதறியேசிலும்பிநின்றால், பேதைதன்வயிற்றினுள்ளேபெருகுசு ரோணிதமேதங்கி, வாதைகள்பண்ணிமாதவிடாய்காலம் வருத்தஞ்செ ய்யும். உஉ

## கர்ப்பந்தரிக்கக்குழம்பு.

இடுப்பொடுகடுத்துநொந்துஇடைவிடாக்குத்தலுண்டாய, தடுத் திடாக்கர்ப்பந்தன்னைத்தங்கிடாவண்ணஞ்செய்யும், அடுத்ததோராவி னெய்யிலானதோர்திருகுகள்ளி, கொடுத்திடாத்துமட்டிக்காயின் கு ழம்பதுகொடுக்கத்தங்கும். உங

## சூதகத்தில் வாயுதங்கியகுணம்.

மாதற்கைபிடித்தபோதுவந்திடுநாடிமூன்றும், சேதமாயிற்றுநின் றுசேரவேபதிந்துநிறகில், ஓதுமேசூதகத்தி லோங்கியவாய்வேநின்று பேதமாய்வாதைபண்ணிபிணிகளைவிளைக்குந்தானே. உச

## எரிகுன்ம வரலாறும் திருமருந்தும்.

வாதமும்பித்தங்கூடிவன்பெலத்துடனேயோடில். சீததுவயிற்றி னுள்ளேயிரண்டதோர்மந்தம்பற்றி, வேதனையெரிப்புறக்கூடி விர்ண்டி டுமெரித்தகுன்மம், ஆதிசேர்சினிகூட்டி அஷ்டசூரணந்தான்கொள்ளே

## சூலைநோய்வரலாறு.

திருத்தமாய்வாதத்தோடேதீங்கொடுபித்தஞ்சேரிற், பொருப்புக ள்தோறுநொந்துபோதவேபிடிக்குஞ்சூலை, பெருத்திடாவாயுகொள் ளும் பேசியவயிறேபோகும், கருத்தினாலறிந்துநன்றாய் கண்டிடாய் மனிதர்க்கெல்லாம். உரு

## காலன்பிடிக்கும்நாடி.

அரவின்றனைவப்போல அடிக்கடியுதறிவாதம், உரம்பெறநின் றுபித்தம்ஓடியேயொளிக்குமாகி ல், திரும்பிடாக்காலன்றானேதீங்குட ன்பிடித்தானென்று, வரம்பெறுமுனிவர்தானும் வாகொடுசொன்னார் தேர்ந்தே, உஎ

## மூலாதாரவாஸ்தயால்சாதலும் பயித்தியம்பிடித்தலுமறிக.

பிறந்திடும்பித்தநாடிபிரண்டுமேநிற்குமாகில், வரண்டிடுமூலாதா ர வாதையால்மடிவுசெய்யும், காண்டதுபித்தநாடி கதிப்பொடுதுடித் துநின்றால்; அரண்டிடும் பயித்தியந்தான் அடைவொடுவந்துகூடும், உஅ

### பேச்செழும்பலும் அடங்கலும் குளறலும் வருகை.

உற்றிடும்பித்தநாடி யொழுங்கொடுயெழும்பிநின்றால்-வற்றிடாப் பேசுகின்ற வசனமுமெழும்பிநிற்கும்-மத்திமப்பித்தநாடி மடங்கியேது டித்துநின்றால்-உத்தமப்பேச்சுதானு மொடுங்கிவாய்குளறிப்போகும்.

### பயித்தியநோய் வரலாறும் தீருமருந்தும்.

பித்தமாய்நாடிதானே பெலத்தொடுதனித்துநிற்கில்-மத்திமபயித் தியத்தை வளர்த்திடும்வாக்ஷிசேரும்- உத்தமமூளைதன்னி லுருகியேகு றைந்துநிற்கும் - சிற்றாமுத்தாடுமெண்ணெய் சிரசிற்றேய்த்தூறப்போ

கிறுகிறுப்புத்திரக்கஷாயம். (மே

உதறியேபித்தநாடி உழுவைப்போற்றுடித்துநிற்கிற்-பதறியேயுட ம்பழுத்தும்பாய்ந்திடுஞ்சிறுநீர்வற்றும்-முதலியபுந்திமாறி கிறுகிறுத்து மூலையுண்டாம்-நிதவியபயரும்பச்சைநெல்லிக்காய் கஷாயங்கூட்டே.()

### சுரத்தோடுகபாலக்குத்துவரலாறுந் தீரும்வகையும்,

நடுவிரல்பித்தமற்றுமந்தமாய் நடக்குமாகில்-வடிவளவுடம்பழுத்தி மந்தித்துச் சுரமுந்தோன்றி-இடியிடித்ததுபோலோடிச் சிரசினிலிடித் துக்குத்தும்-படியவேசாதிலிங்கப் புகையுண்ணப்பறந்துபோமே.௩௨

### வாக்ஷிசுரம் பிரமேகம் வரலாறு.

வளர்ந்திடும்பித்தநாடி வலமிடம்பிசகாவண்ணம்-பிளந்ததுதனித் துப்பச்சைப்புழுநுடங்கதுபோலோடில்-உளந்தனில்வாக்ஷிதங்கி யுட ம்புலர்ந்தஸ்திதன்னில்-வளைந்திடுஞ்சுரங்கள்வந்துவளர்பிரமேகமாமே.

### மஞ்சள்நிறநீர்க்கடுப்புஉடல்வரட்சிதீர வங்கபற்பம்.

சலநிறமஞ்சள்போலாய்க் கடுத்திடுந்தளர்ச்சிசெய்யும்-உலவியமூ ன்றுமாதம்பழகிற்பின் னுடம்புதன்னிற்-குலவியவங்கபற்பங் கொடுக் காமற்போவாராகில் - விலகிடாச்சூலைவந்துவெடித்துப்புண்ணாகுமெ ன்னே. (௩௪)

### பித்தத்தாலுண்டாகுநோய்கள் வருதலறிக.

பித்தமேதனித்தாற்கூடுபெலத்துடலுலரச்செய்யும்-பித்தமேமிகு ந்தாலீளையிருமலும்பெலத்துநிற்கும்-பித்தமேமிகுந்துதாறுபெலன் குறைந்துடம்பழுத்தும் - பித்தமேதிரட்டிநூலிற் பேசினர்பெரியோர் தாமே. (௩௫)

### பெருவாதம் உதரவாயுபயித்தியமுதலான

### பிணிகளுற்பவித்தல்.

பித்தமேகதித்தபோதுபெருத்திடும்வாதமுண்டாம்-பித்தமேகதித் தபோது பெருத்திடுமவயிற்றில்வாயு-பித்தமேகதித்தபோதுபிதற்றிடு ம்பித்தேதேறு-பித்தமேகதித்தபோதுபிறந்திடும்பிணியநேகம் (௩௬)

சன்னிவாதம்-பிணைத்தல்-பித்தல்-நினைவிழப்புவருகை.

பித்தந்தான்வாதத்தோடு பிணைந்துநேர்தோன்றுமாகில், மத்திபச ன்னிவாதம்வந்திடும்பினைத்தலுண்டாம்-உற்றிடும்வாதத்தோடு வுறவதா ய்ப்பித்தமீறில்-சித்தமும்பிதற்றிப்பேசிநினைவிழந்திருப்பரென்னே. (

மேற்படி நோய்கள்தீர மருந்தும் க்ஷயரோகவரலாறும்.

மூற்றுமிக்குணங்கள்கண்டால் முசுறதன்முட்டைதன்னை-கத்தப ப்பாலிலோடுகலந்தருந்திதமாம்பின்பு-பித்தந்தானையத்தோடு பெருமு கந்திரும்பிசிறகில்-மத்திபக்ஷயரோகத்தை வாவெனவழைக்குந்தானே.

சீழும் விடாதசுரமுங்காணும் க்ஷயரோகந்தீரக் குக்கிலாதிநெய்யுஞ் சாறும்,

இருமியேசீழும்வீழ்ந்துயிடைவிடாச்சுரமுங்காயும்-பருவமாய்நெ ஞ்சிற்பற்றிபதறியேயிரத்தம்வீழும்-குருநிலைக்குக்கிலாதி கிருதத்தாற்கு டிபோம்பின்பு-வருநெறிகண்டங்தோடை வளையதனீராக்கொள்ளே,

அசாத்தியசுரநாடிக்குறியறிதல்,

ஐயமாம்நாடிதானேயரணைவாலொத்துநேர்ந்து-பையவேமந்தமப ற்றிப்பதறிடாதிருக்குமாகில்- செய்வதொன்றில்லாக்காலன் தேடுவது ண்மையென்று-கையினைப்பிடிக்கவேண்டாங்கழற்றிகொண்டப்பாற் செல்லே, (௩௰)

இருமலிளைப்பு கோழைதீர.

உற்றிடும்ஐயநாடியோங்கியேதுடித்துநின்றால் - பற்றிடுமிருமலி ளைபதறியேயிளைப்புண்டாகி-மெத்தவேகோழைவாயு மிகுத்திடிற்கபக த்தோடு-சுத்தமாய்தூதுவேளைதோடைகைகண்டங்கூட்டே. சுக தொண்டையும் நெஞ்சுங்கட்டி மழைகாலத்திலுபாதித்தில்

தீரக் குக்கிலாதிநெய்,

இதமொடுகுறுகிநாடி யிளகிடாதிருகிநின்றால்-பதமொடுதொண் டைகட்டும்பழுத்துநெஞ்சதனிற்கட்டும் - விதமொடுமழைநேரத்தில்மி குதியாய்வாதைபண்ணும்-நிதியெனக்குக்கிலாதி நெய்யினால்மாறுந்தா னே ௩௨

பீனசம்-மூக்குநீர்ப்பாய்ச்சல் மண்டைச்சூலை

தலைகனப்புத்தீர நண்டுநெய்.

ஒலிக்கமாஞ்சிலேட்மநாடியொழுங்கொடுபதறிநின்றால்,நடுக்கமா ய்பீனசங்கள்நாசிநீர்ப்பாய்ச்சலாகும்-பிடித்திடுமண்டைச்சூலைபெருத் திடுந்தலைகனப்பு-கடுத்திடும்நண்டுநெய்யைத்தலையினிற்றடவத்தீரும் )

### ஓர்பகலுக்குளிறக்கும்நாடிக்குறி,

மத்திபஜயநாடிமந்தித்துவுழன்றுநின்று-மூத்தியயிசல்போல மூடிகியேபதறுமாகில்- சித்தத்தோர்பகலுக்குள்ளே நில்லாதுமரணம்வந்து-சுத்தியேமரிப்பனென்றேசொல்லுவார்நல்லோர்தாமே ௬௪

### குத்தங் கோழை வாயு மரணநிச்சயக்குறி

சிலேட்டுமநாடிதானே தெளிவொடுநிற்கிற்றீதாம்-சிலேட்டுமமந்தம்பற்றில்சேர்ந்திடுங்கோழைவாயு-சிலேட்டுமமிகுந்துநின்றால் செப்பிடுமரணந்திண்ணம்-சிலேட்டுமத்திரட்டதெல்லாந் தெளிவொடுகண்டுகொள்ளே ௬௫

### சாகுங்குறியறிதல்.

ஐயந்தான்பித்தந்தன்னையணைந்தெதிர்த்தேறுமாகில்-கையவோர்நாளிற்காலன்நாடியேவருவதுண்மை - பையவேஐயம்பாய்ந்துவாதத்தைப்பற்றிநின்றால்-செய்யும்வாறென்னசாவோர்நாழிகைதிண்ணந்தானே

### வியாதிதோஷம் ஐயசன்னி மரணங்கள்வருகை

ஐயமேகதித்தபோது அணுகியே வியாதியுண்டாம்-ஐயமேகதித்தபோது அறிந்திடுந்தோஷமாகும்-ஐயமேகதித்தபோதுஐயமாஞ்சன்னியாகும்-ஐயமேகதித்தபோதவ்வையமேமெலிந்துகொல்லும் ௬௭

### சரீரக்குத்தலும் நெஞ்சுநோக்காடுமாய்க்காணு மேகமறிக

பார்த்திடுநாடிமூன்றும் பதிந்ததுமலிந்துநிற்கில்-தோத்திடுமேகமுள்ளேதோன்றியேபொருந்திமெய்யில்- ஆத்திடாக்குத்தலுண்டாயதனொடுநெஞ்சம்நோகும்-தேத்தமாயிக்குணங்கள் தெளியவேயறிந்திடாயே ௬௮

### பிணிவாராமையும் வருகையுமறிக

வாதபித்தையமூன்றும வண்பலத்துடனேதத்தம்-பேதமொன்றில்லாவண்ணம்பேசியதானந்தன்னில்-நீதியாய்நிலைத்துநின்றால் நெடும்பிணிசிக்கலில்லை - தாதுவுமொன்றோடொன்று தாவிடிற்பிணிகள்தானே ௬௯

### கழல்வாதம்-மூலம்-சாவு-வாழ்வுவருகை

மூவரும்உறத்துநின்றால் மூண்டிடுங்கழல்வாதங்கள் -மூவருமந்தமாறைல்முளைத்திடுமூலமெல்லாம்-மூவரும்பதுங்கிநின்றால் முடிவதுதிண்ணங்கண்டாய்-மூவருந்தன்தன்காலத்துதித்திடில்வாழலாமே ௭௰

### ஆறுமாதத்திற்-சாகுங்குறியறிதல்

காலையில்மூன்றுநாடிகதிப்பொடுநடக்குமாகில் - வாலையாமுச்சி

காலம்வன்பித்தமுமூன்றுமாகில்-மாலையில்வாதந்தானும்ஐயத்தினுறையு
மாகில்-நீலகண்டத்தாரானைநிலைச்சாவுமாதமாறே ௫௧

மலசல அடைப்பும் விடுப்பும்வருதலறிக

பெருவிரலிரண்டுபக்கம் நாடிதான்பிசகியோடில்-மருவியமலசல
ங்கள்மந்தித்தேயடைத்துக்கொள்ளும்-பெருகவேயடிவயிற்றிற்பிடித்து
மேலெழுப்புமாகில்-ததியிலைமலசலங்கள்தானதுகழன்றுபோமே ()

தொப்புளில்-மலம்-ஜலம்-வாயு-இடறுசந்து

இடது முதுகு இறுத்தலறிக

நடுவிரல்வலதுபக்கம்நாடிதானடக்கும்போது-மடையதாமுந்தித
ன்னில்மலம்சலம்வாயுசேரும்-வடநிலைமுலையின்மாதேவாகொடுயிடது
சந்து-இடமுதுகழுத்திநிற்பதென்பது முன்சொன்னேமே ௫௩

தொப்புளின்கீழேஐயமும்பித்தமுஞ்சேருங்குணமறிக

நடுவிரலிடதுபக்கம் நாடிதானடக்கும்போது-அடைவொடுஉந்தி
யின்கீழையொடுபித்தஞ்சேரும்-கடகரியுரித்தோன்றனைக் கருத்தினி
லிருத்திக்கொண்டு-வடுவறநாடிபார்த்து வந்தநோயறிந்துசொல்லே ()

கால்-கை-வலிப்பும்-உடல் நோக்காடுமாய்வருஞ்

சூலைநோய்க்குறி.

சிறுவிரலிரண்டுபக்கம்நாடிதான் சிதறியோடில் - மருவியகாலுங்
கையும்வலிந்துடல்மிகவேநோகும்-ஒருபொருளாகிநின்றவுமையொரு
பாகம்வைத்த-திருசடைசிவனைநோக்கிச்செப்பினேன்சூலையாமே ௫௫

சூலைநோய்-கசத்தவாய்நீர்-மயக்கம்-வாந்தி

அடிவயிற்றுச்சூலைவருகை

மோதிரவிரலிடத்தேமுடிகியே நாடியோடில்-காதியுங்சூலைநோயு
ண்டாங்கைத்திடும்வாய்நீரூறும்-ஆதியானருளினாலே மயக்கமும்வாந்தி
யுண்டாம்-ஆதியேயடிவயிற்றில்சூலையுமமர்ந்திருக்கும் ௫௬

கால்-கை-கடுப்பு-சோபம்-உந்திநோய்-தலைவலிவருகையும்

சிகிச்சையு மறிதல்

மோதிரவிரல்வலத்தேமுடுகியேநாடியோடில்-கால்களுங்கைகளு
ந்தான்கடுத்துப்பின்சோபமாகி,ஓதியேயுந்திநொந்து வுறுதியாய்த்தலை
வலிககில்-ஆதியானருளினாலேயவர்கட்குநசியம்பண்ணே ௫௭

உ-நாளிலும்-அ-நாளிலுஞ் சாகுங்குறி

வெள்ளநீரோடும்போலசிலேட்டுமமீறியோடில்-வள்ளல்தானறி
யச்சொன்னேமெரிப்பதுமற்றுநாளில்-தெள்ளியவாதந்தானுஞ்சிதறியே
யோடுமாகில்-உள்ளியநாளோரெட்டிலுறுதியாய்ச்சாவாரென்னே ()

௩நாள்-௰௫நாள்-௪௰-நாளிற்சாகுங்குறி.

பித்தமிப்படியேயோடிற் பிதற்றிநாள்மூன்றிற்கொல்லும்-மூத்தி யவாதபித்த மூயங்கியப்படியேயோடில்-பற்றறச்சொன்னேங்கண்டீர் பதினைந்துநாளிற்கொல்லும்-நற்றியஐயங்கூடில் நாற்பதுநாளிற்கொல் லும். ௫௯

உடனேயும்-௩-மாதத்திலுஞ் சாகும் நாடிக்குறி.

அரணைவாற்றுடிபோலோடி லாங்கவன்பிழைப்பதில்லை-பாவுதே ட்கொடுக்குப்போலும்பதைத்திடிற்சாவுதிண்ணங் - கரையெறும்புபது போலோடிற்கண்டிடாய் திங்கள்மூன்றில் - வளையணிமுலைநல்மாதே மரணமென்றறிந்துகொள்ளே. ௬௰

மரணநாடிக்குறியறிதல்.

ஐயமாஞ்சிலேட்டுமத்தி லாடியநாடிதானும் - தொய்யவேதவளை போலத்தொடங்கியேகுதித்திட்டாலும்-பையவேபுரண்டுபுத்துப்பாம் பெனநடைகண்டாலும்-மைசெறிகுழலினளேமரணமென்றறிந்துகொ ள்ளே. ௬௧

ஒருமாதத்திற்சாகும் நாடிக்குறி.

தேளெனத்தெறித்துச்சற்றேதிரிநாடிசெல்லுமாகில் -மாளவேமர ணவாதைவந்திடுஞ்சன்னியுண்டாம்-மீளுவதில்லைமுன்னாள் விதிப்படி வந்ததீது-நாளறிதிங்கட்குள்ளேநாசமாய்க்கொல்லுந்தானே, ௬௨

இரண்டாநாளிலும்-எட்டுநாளிலுஞ்சாகும் ஐயநாடிக்குறி

புரண்டதூஉருண்டுமேலேபொருந்தியேநடக்குமாகில்- இரண்டா நாளினிற்றனியல்பதாமரணமென்க - சுருண்டமென்குழலினளே சொல்லுநாளெட்டினிற்றான் - மரணமேவருகுமென்றுவாகொடுவழங் குவாயே. ௬௩

மரணநாடிக்குறியறிதல்.

கண்டவிற்றுடிப்புமூண்டுகடியமூவிரலையூன்றில் - விண்டையம் வாதம்பித்தமேவியநாடிமூன்றும்- ஒண்டொடிமாதேகேளா யுயர்ந்த தோர்தோற்றமாகி-மண்டியேயெழுந்துபாயில்மாணமென்றறிந்துகொ ள்ளே, ௬௪

ஒருமாதத்திற்சாகும்நாடிக்குறியறிதல்.

ஏற்றியதீபந்தன்னிலெரிசுடர்த் தீயைப்போல-போற்றியநாடிதா னும்பொலிவுறத்தோன்றுமாகில்-மாற்றரும்வாழ்வுநாளு மாளுமோர்மா தத்தென்று-நாற்றிசையுள்ளோர்க்கெல்லாம்நாடிநீநயந்துசொல்லே. ()

பிராணன்விடும்நாடிக்குறியறிதல்.

நிறைபுரவட்டம்பூண்டுநின்றிடுமரணைவால்போற்-குறைபடாப்பி த்தமொன்றுங் குறைந்துமேலிற்குமாகில்-உறைவிடும்பிராணனென்று வுண்மைசொல்வாகடத்திற்-பறையதுகட்டிச்சாற்றும்பண்டிதர்க்கெல் லாம்பாரே. ௬௫

நோயின்சாரம்-முற்றிற்று.

கடவுள் துணை.

—•—

அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த

# அவிழ்தசாரம் ௩௱.

## கணபதி துதி.

### விருத்தம்.

ஆதியாங்கணேசன்காப்பு அறுநூற்றுக்கருவையெல்லாஞ்
சோதியாம்ஆயிபாதந் துணையெனவுட்கொண்டேத்தி
நீதியாந்திரட்டிச்சூத்திரம் நிலைத்தவாகடமாய்ச்சொல்ல
வாதமாம்பிணிகள்தீரு மருந்தொடுகுணத்தைக்கேளே. (௧)

### வாதம்-எண்பதுந்தீரச்சூரணம்.

வாதந்தானெண்பதாகும் வருகின்றபக்கவாதம்
சீதமெய்நடுக்குவாதஞ் சிறந்திடுமுடக்குவாதம்
சூதமெய்சந்துவாதந் தோன்றியமுகத்தின்வாதம்
பேதமாம்வாதந்தீரப் பெருத்திடுமருந்துகேளே. (௨)

மருந்துதான்சித்திரமூலம் வளருமாவிலிங்குகொன்றை
திருந்தியமுருங்கைசங்கு சிறந்தவெள்ளறுகுவேம்பு
பொருந்தியயெருக்குசுக்கு புகழுந்திப்பிலிமரிசங்
கருந்தியுலவணமஞ்சுங் கால்மண்டலந்தான்கொள்ளே. (௩

### மேலுக்குத் தொக்கிடமிடுந்தயிலம்.

கொள்ளவேயெண்ணெயஞ்சுங் குலவுதில்லைப்பாற்கற்கம்
விள்ளவேமுருங்கைவாகை மிகுத்தமாவிலிங்கைமூலங்
கள்ளவிழ்காயமிந்து கடியஇப்பிலிவசம்பு
உள்ளமாயெரித்துப்பின்னை யுடம்புதொக்கடமுஞ்செய்யே. (௪)

### பித்தம் நாற்பதுந்தீரச் சூரணம்.

செய்யதோரெண்ணஞ்சாகச் சிறந்திடும்பித்தங்கேளாய்
அய்யமாஞ்சிந்தப்பிரமை யறிவிலாப்பிரமைசுற்றும்
நையவேவெடிக்கல்வாந்தி நலத்திடுசுழற்றல்வாய்நீர்
நைதுபலேயிவைகளுந்துச் சாற்றிடமருந்துகேளே. (௫)

## சூரணஞ்செய்யுந்தினுசுகள்.

சாற்றியமதுரங்கோஷ்டந்தளருமஞ்சிட்டியேலம்-போற்றியநெல்லிமாஞ்சில்புகழுஞ்சந்தனங்கிராம்பு-மாற்றியதாளிசந்தான் மருவுசீரகமும்நாகம் - பாற்றுசர்க்கரையுங்கூட்டிப்பரிந்துமண்டலந்தான்கொள்ளே. (௬)

## பித்தம் நாற்பதுந்தீர மூழ்குந்தைலம்.

பரிந்துநல்லெண்ணெய்பாலும் பருத்திநெல்லிச்சாறும்-இருந்தியமுசமுசுக்கைசீந்திலும்பொன்னுங்காணி - வருந்தியமுத்தஞ்சிட்டிமதுரமோடேலமாஞ்சில் - பொருந்துசண்பகப்பூகிராம்புபுனைந்தெரித்தலைக்குவாரே. (எ)

## சிலேட்டுமம் இருபதுந்தீரநெய்.

வார்பெறுதனத்தாய்ஐயம்வளர்ந்திடுமிருபதாகப்-பேர்பெறுசுவாசகாசம்பெருயிருமலுமிரத்தம்-சீர்பெறுகாசமாந்தைதிகைத்திடுசயரோகங்கள்-தார்பெறுசாமுண்டாகுந்தனக்கெலாமருந்துகேளே. (அ)

## நெய்செய்யுந்தினுசுகள்.

தனதுநல்லிஞ்சிச்சாறு தருதிரிகடுகோடேலம்-மனமுறுதேக்குசிங்கிவாலுழுவரிசியிந்து-கனமுறுநாகங்கண்டங்கத்திரியர்த்தையோடு - நிலையுறுசீழிரத்தம்நெய்யெரித்துள்ளேகொள்ளே. (௯)

எரித்தநல்லெண்ணெய்பாலும் இருவேலிவிலாமிச்சோடு-தரித்திடுசீந்தில்முத்தஞ்சந்தனதேவதாரம் - உரித்திடுதண்ணீர்மிட்டாணுயர்நிலப்பனைநன்னாரி-பருத்தமஞ்சனமஞ்சோடுபகர்தலைதனக்குவாரே, ()

## மூலநோயாறுந்தீரச் சூரணம்.

தனக்குறுமிரத்தமூலந் தாங்குறுமூலஞ்சீமூலம்-மனக்குறுவாதபித்தம்வளையமூலத்தோடு-சினக்குறுமுளையாமூலஞ்சீமலக்குமூதமெல்லாங்-கனக்குறுமருந்துசொல்லகன்னியேகேட்டிடாயே. ௰௧

கன்னியின்சருகுமுத்தங் கரணையும்பெருந்தசுக்கும்-வன்னியாஞ்சித்திரமூலமருட்கிழங்கொடுகடுக்காய் - பன்னியபிரண்டைகொன்றைப்பகர்புளிநறலைகாட்டிற்- றுன்னியகரணைபாலிற் சூரணஞ்செய்துகொள்ளே. ௰௨

## கிராணிதீரமருந்து.

செய்திடுவாதபித்தசிலேட்டுமக்கிராணிமூலங்-கொய்திடுகிராணி வாயுகூடியயிரத்தபித்தம் - செய்திடுசலக்கிராணி நிலைத்திடுசீகிராணி-எய்திடுகிராணிக்கெல்லா மினியநல்மருந்துகேளே. ௰௩

இனியதோடுப்புகாய மிந்துப்புவளையலுப்பு-கனியவெள்ளுள்ளி சுக்குகடிபதிப்பிலிமரீசந்-தனியருசவுட்டுமண்ணுந்தழற்சித்ராமூலமோடும்-பணியதுபிரமிச்சாற்றால்பண்ணியமருந்துகொள்ளே. ௰௪

## குன்மமெட்டுந்தீரச் சூரணம்.

பண்ணியவாதபித்தம் பகரையக்குன்மமெல்லாம்-நண்ணியசத்திகுன்மம்நலத்திடுவாய்நீர்க்குன்மங்- கண்ணியயெரியாங்குன்மங்கனத்திடும்பிரட்டுக்குன்மங்-குண்ணியகுன்மந்தீரக்கூறக்கேள்மருந்துதானே.

கூறியநாவிகூநங்கொடியவெண்காரந்தாரங்-தேறியயிருவிலிங்கந்திகழ்மனோசிலையுங்காரங்-காறியகெந்தகந்தான்களர்திரிகடுகுகூட்டி-ஆறியபொடியதாக்கியதிற்றேன்விட்டருந்துவாயே. ௰௬

அருந்திடவாதபித்தம் ஐயமோடிற்சத்திதான்-வருந்தும்வாதத்தில் நாலும்வளர்சலபித்தத்தாறும்-பொருந்தும்ஐயத்திற்பத்தும் போகுமேயிவைகளெல்லாம்-திருந்தியவாதபித்தசிலேட்டமுந்தீரலாமே. ௰௭

## தலைமுழுக்குந்தைலம்.

ஆமதுமருந்துகேளாயலைகடல்முத்தங்கோஷ்டம்-தாமதுயிலந்தைக்கொட்டை கர்ந்தையுந்தரும்பூலாவும்-போமிதுகொன்றையோடு புகழ்ம்பாதிரியும்நாவல்- ஓமதுகாசசற்நாய்ந்த வுயர்மதுராமுந்தான்றீயே,

மதுராஞ்சந்தனங்கிராம்புமகிழ்பச்சைமகாப்பூவுஞ்-சதிர்பெறுமிலவங்கந்தான்தாளிசமாஞ்சில்பூரங் - கதிரிலாமிச்சஞ்சீந்தில் கனமுத்தம்வேலிசட்டம்-எதிரிலாயெண்ணெய்பாலு மெரித்துநீமுழுகிடாயே. ௰௯

## மேகம் இருபதுந்தீர ரசாயனம்.

எரித்திடுமிரத்தமேகமிசைந்தநீமேகந்தண்டில்-மரித்திடுமேகபுண்ணும்வருந்தியகிரிச்சம்பாளை-தரித்திடுதுள்ளிமேகஞ்சலக்கட்டுமேகந்தங்கா-விரித்திடுமேகந்தீரவிளம்பக்கேள்மருந்துதானே, ௨௰

விளங்கியபறங்கிப்பட்டை மேரிகெந்தகஞ்சாதிக்காய் களம்புறகி ராம்புநாகங்கற்பூரஞ்சாதிப்பத்திரி -தளம்புறுமசுவகெந்தி தளர்கொடு வேலிமாஞ்சி-இளம்புசர்க்கரைநெய்கூட்டி யிதமுடனுட்கொள்வாயே.

காமாலைதீரப்பொடி,

இதமுறுவாதபித்தமிசைந்தசிலேட்டுமங்காமாலை, பதமுறுமழற்கா மாலைபாண்டுவீங்கியகாமாலை நிதமுறுவரட்காமாலை நிறமஞ்சள் நீர்க் காமாலை,சிதமுலைவிற்பரங்கள் சேர்ந்தகாமாலைதானே. ௨௨

சேர்ந்தகாமாலைக்கெல்லாந்திரந்தாப்பொடியுங்கிட்டஞ், சார்ந்திடு ங்கடுக்காய்நெல்லி தான்றிசீரகமிரண்டும்போர்த்தவெள்ளுள்ளிகாந்தம் புகழ்பெறுகாயஞ்சுக்கு சார்ந்ததிப்பிலிமரீசந்தான்பதம்பழச்சாற்றீயே

சொறிசிரங்குதீர உள்ளுக்குக்கிரதம்,

பதமுறுசூலைபுண்கள்பகர்ந்திடுகெடிவிசாரம் இகமுறுபெருவியா தியிசைந்திடுகுட்டரோகம் சதமுறுதேமல்மேனி தளருந்தாழ ரகை வெள்ளை,நிதமுறுசொறிசிரங்கு நிகழ்த்திடுமருந்துகேளே. ௨௪

மேலுக்குச் சாம்பிராணி தயிலம்பூசல்.

நிகழ்த்துநீரெட்டிவித்து நேர்படுஞ்சூதம்லிங்கந், தகர்ந்தநெல்லிக் காய்கெந்திதாரமுந்துருசுதுத்தம்,புகர்ந்தநெய் வார்த்தனைத்துப் பொ ருந்தநாற்பதுநாட்கொள்ள தகர்ந்திடுஞ் சாம்பிராணித் தயிலஞ்செய் துடம்பிற்பூசே. ௨௫

கண்டத்துக்குமேற்பட்டசகலரோகமுந்தீரச்சூரணம்.

பூசியகபாலசூலைபொறுத்தபின்னிசுநீர்த்தும்மல் நாசிகாபீடரோ கம்நாற்றமுந்தின்னுங்குஷ்டங் தேசிகங்காதிற்சீழுஞ்சேர்ந்திடுங்கபால வாயு காசினிதந்தரோகங் காந்திடமருந்துகேளே. ௨௬

காந்திடும்பெருமருந்துகண்டங்கத்திரியுஞ்சுக்குஞ் சுரந்திடுஞ்செ ங்கத்தாரிதோன்றுசீரகமிரண்டும் பாக்திடுகடுகுரோணிபகர்சங்கம்அர த்தையோடு கிரந்தாஞ்சூர்ணந்தின்ன நீங்குமேல்நோய்கள்தானே. ௨௭

தலைமூழ்குந்தயிலம்.

நீங்குகார்த்திகைக்கிழங்கு நிலக்குமிழ்தசமூலந்தான் பாங்குறும ஞ்சள்மூன்றுபகர்குப்பிக்கடுகுரோணி தேங்குசாரடையெருக்குசெங் கொடுவேலிசிந்தில் பாங்குநல்லெண்ணெய்செய்து பருவமாய் வளஞ் செய்வாயே. ௨௮

கவிசை பெருவயிறு மகோதரந்தீர.

பருவமாங்கவிசையோடுபக்கவிப்புருதிசால உருவமாம்பீலிகோ வையுதரத்தின்சூலையண்டி, கருவதையழிக்குங்கர்ப்பக் கடியவிப்புருதி யோடு பெருவயிறுடனேமற்றப் பெருமகோதாமுந்தானே. ௨௯

பேய்த்தும்மட்டிக்கா யெண்ணெய்.

பெருத்தபேய்த்தும்மட்டிக்காய் பேசும்வெண்காக்கணம்வேர் திருத்தமாம்லவணமைந்துஞ் சேர்ந்திடுகாரமைந்தும், வருத்தமா விலிங்கைகொன்றைவச்சிரத்தின்பால்மூலங் கருத்துறுவசம்புமஞ்சள்காயம் வெள்ளுள்ளிகூட்டே. ௩௰

காயநற்சிவதைபோளங்காட்டிஞமணக்கின்வித்து வாயரோகணிமுருங்கைவள்ளிமாவுரிசின்னி பாயுறுகழற்சிகொத்தான் பகரும்வேலிப்பருத்தி தேய்விளக்கெண்ணெய்பாலுஞ்சேர்த்தெரித்துள்ளேகொள்ளே. ௩௧

சகலவாயுவுகளுந்தீரச் சூரணம்.

சேர்த்திடுமிரத்தரோகஞ் செய்யநெஞ்சிறுகலுக்கும் பார்த்திடும்வாதவாயுபயித்தியவாயுமேகஞ் சார்த்திடும்வாயுமெய்யில்சருவாங்கவாயுமூலம் ஏர்த்திடும்வாயவுக்கெல்லா மிசைந்தநல்மருந்துகேளே. ௩௨

சூரணத்தினுசுகள்,

இசைந்தநற்சித்திரமூலமாந்திரிபலையுமிந்து இசைந்தவாய் விளங்கங்காய மியற்றிடுசவுட்டுமெண்ணும் கசந்தரோகணியுந்தேனுங்கலந்துண்ணநோய்கள்போமே,

இரத்தவாந்தி ஐயகாசம் எலும்புருக்கித்தீர நெய.

கலந்திடுமிரத்தவாந்திகளரத்தரோகநெஞ்சிற் புலந்திடுமிரத்தபித்தம்பொருந்தியசயகாசங்கள் மலந்திடும்பெரும்பாடோடுவளரெலும்புருக்கிசூலை கலந்திகழ்புண்ணுந்தீர நாரியேமருந்துகேளே. ௩௪

நாரியேதண்ணீர்மிட்டான்நல்லத்தியரசால்வித்து பாரியபனையுஞ்சிந்தில் பகர்முத்தஞ்சாதிக்காயுஞ் சீரியகிராம்புபத்திரிதிரவியமைந்துங்கூட்டி கூரியநெய்யிற்செய்துக் கொடுத்திட ரோகம்போமே. ௩௫

சகலசுரங்களுந்தீரக் கியாழம்.

நொடுத்திடுசுரத்துக்கெல்லாங்கூர்விலாமிச்சுஞ்சிந்தில் எடுத்தகாஞ்சோறிமூக்தமிசைபற்படாகமூட்டி மடுத்திடுவேம்புகோஷடம்வளர்கண்டங்கத்திரியோடு அடைவுடன் கியாழஞ்செய்து அருந்திடிற்சுரந்தான்போமே. ௩௬

சன்னிகள் தீரநசியம்.

தன்னுடன்சன்னிக்கெல்லாம்தயங்கியமுசுறுமுட்டை மன்னுபூநாகமோடுவளர்ந்திடுகடுகுகாயம், சொன்னதிப்பிலிமூலப்பால் துலங்கியயிஞ்சிச்சாறு, முன்னமேவசம்போடுள்ளிமூக்கினில்நசியஞ்செய்யே

சன்னிதீர மேலுக்குத் தயிலம்பூசல்.

ஓடியநர்ப்பத்தோடு உள்ளியவசம்புதாரம் நாடியகௌரிநாவிநலந்திகழ்காயம்போளந் தேடியமஞ்சள்மூலந்திரண்டமாவிலிங்கைவாகை கூடியபெருமருந்துசொல்சிறுகுறிஞ்சான்கூட்டே. ௩௮

சொல்லியெருக்கும்புங்குந் துலங்கிய முருங்கைவேரும் மல்லி
கைசதுரக்கள்ளி மாமஞ்சள் நெரியரிசிப்பால், புல்லியவெண்ணையை
ந்தும்புகழுங்குக்குடத்தினண்டம், கல்லியபதமதாக்கிக்கருத்துடன்மே
லும்பூசே. ௩௯

சகலகருப்பஞந்திர எண்ணெய்.

கருத்துறுபுடைகாப்பன் கருங்கொள்ளிக்காப்பன்வீங்கி வருத்தி
டுங்காப்பன்பித்த வாதசிலேட்டுமக்காப்பன், பொருத்திடுஞ்செங்காப்
பன்பிலந்தநோரெரிகரப்பன், இருத்தமாங்காப்பனெல்லாந் தீர்நதி
டமருந்துகேளே. ௪௰

தீர்ந்திடசெங்கத்தாரி சேர்கருநொச்சிதேற்ற, சார்ந்திடுங்கழற்
சிபுங்குசங்கொடுசெங்கக்குப்பி, பேர்ந்திடுஞ் சிரந்திராயன் புகழ்செருப்
படையுஞ்சின்னி, கூர்ந்தவேலிப்பருத்திகொடிகள்வெள்ளறுகுதானே

கொடியவேம்பாடம்பட்டைகூரியசிவனார்வேம்பு, நெடியநற்சிவ
தைமூலம் நேரியகண்டங்காரி, பொடியதுகடுக்காய்ரோஜஸி பூதககரப்
பான்பட்டை, வெடியசீரகமிரண்டு விளக்கெண்ணெயெரித்துட்கொ
ள்ளே. ௪௨

சகலவிஷங்களுந்திரக் குடிநீர்.

கொள்ளவேவிஷபாகங்கள் கூரிடபலவாயுண்டு, முள்ளிதூதளை
நாரத்தைமுதிருய்யக்கொண்டாநெச்சி, கள்ளவிழ்பிரமிசின்னிகழற்சி
மாமலைகன்னுரி,தெள்ளியகடுக்காய்சுக்குசேர்த்திட்டுக்குடிநீர் செய்யே

கண்டமாலைபவுத்திரங்கள்திரத் தயிலம்.

செய்யதோர்கண்டமாலை சேர்ந்திடுபவுத்திரங்கள், வெய்யவிப்பு
ருசிவிச்சுமேவிடுந்துடையில்வாழை, பையபுண்குலையோடுபகுத்திடு
ம்பிளவைவீக்கம், உய்யனாயாப்புமூன்று மூடைந்திடமருந்துகேளே

உடைந்தவேப்பெண்ணெயுள்ளி யோங்குவேம்பாடம்பட்டை க
டைந்தாற்கெந்திகுதம் காசுகற் றுருசுதுத்தம், விடைந்தகுங்கிலியந்தா
ரம்மிருதாருசிங்கிகூட்டி,இடைந்திடித்தயிலஞ்செய்யி லிந்தமாநோய்க
ள்போமே, ௪௫

கண்ணோய் கூசு ம்திர மருந்து.

இந்தமாகீலகாச மியற்றிடும்பித்தகாசம், வந்தமாபடலம்பில்லம்
மயிர்சுருத்து புருபெட்டோடு, சந்திகாமாலைக்கண்ணுங் தளர்நேத்திர
வாயுதானும், வ நந்திரொல்லியிலியுமைதர்தாநைந்துறைவகையைக்கேளே

உரைத்திடுமுத்துவெள்ளி உயர்ந்ததோர் தாமிரஞ்சங்கு, கரைத்திடுந்சுசுதுத்தங் கைதலையோடுபொன்னும், திரைத்திடுபீதரோணிசேர்புங்கு நிம்பச்சாற்றால், அரைத்திடுகண்ணிற்றோன்னூற்றுறுநோயகன்றுபோமே, சுஎ

கண்ணோய் கூசுமதிர மூழ்குந்தயிலம்,

போமிதுபொன்னுங்காணி புகழ்சிறுகீரைமுத்தம், ஓமிதுசீந்தில்கிம்பம் உயருஞ்சண்பகப்பூநாகம், ஆமிதுமதூரமேலம்அலருஞ்செங்கழுநீர்கோஷ்டம், நாமினிசொன்னேமெண்ணெய் நற்பதஞ்செய்துமூழ்கே, சஅ

செய்திடுஞ்சகலமருந்துக்கும்விஞ்சைமூலம்

செய்திடுமருந்துக்கெல்லாஞ்சிறந்ததோர்விஞ்சைமூலம்செய்திடும்பரிகாரந்தான் சித்தியாஞ்சகலதெல்லாம், செய்திடுஞ்சூக்ஷாசூக்ஷம் தேகம்பொன்னிறமதாகும், செய்திடும்வாதத்திற்குச்செப்புவேனுதியாமே

வாதஞ்செய்வதற்கு ஆதிக்குருமருந்து,

ஆதியாம்பூமிநாதமதையைந்துசுத்திசெய்து, வேதியாம்பழத்தின்சாறும் விட்டரைத் துலர்த்திக்கொண்டு, சாதியாமோட்டில்வைத்து தணலிடுகோழியாக, வாதியாம் பெயரீர்கேளீர் வடிந்திடு மெண்ணெய்தானே, ருய

முப்பூவாகியபூமிநாதத்தால் சகலசாக்குகளுங்கட்டுபடும்,

தானென்றபூமிநாதம் சகலமுங்கட்டும்பாரு, வானென்றவிந்துவொன்றுவளர்வெடியுப்புநான்கு ஊனென்றசீனம்ரெண்டு ஒன்றாகக்கூட்டிக்கல்வங், கானென்றசிமிட்டுப்பாலுங் கருவுமே விட்டுஆட்டே,

ஆட்டியேவில்லைசெய்து அகலமாமோட்டில்வைத்து, சூட்டியேகாயப்போடுசுருக்கெனக்கனீலிட்டக்கால், மாட்டியேகுக்கிடத்தில்வளமுடனுறிவாங்கி, பூட்டியேயெடுத்துப்பாருபுகழ்முப்பூச் சுண்ணமாச்சே, ருஉ

ஆச்சப்பாவீரம்பூரம் அறைந்திடுஞ்சாக்கையெல்லாம், மூச்சப்பாவோடொட்டாமல் முக்கியமாயடக்குஞ்சொன்னேன், வாச்சப்பாசுண்ணஞ்செயநீர் வளமுள்ளசெந்தூரங்கள், காச்சப்பாநீறுமூலிகட்டுகட்கடிதான்காணே, ருங

உடற்சக்காம்,

அடியொன்று தலைமூன்று அதுவும் சாவாம், அடுத்தவரையோர்நான்கு அதுவுஞ் சாவாம், படிபுகழ முடலின்வரை யெட்டில்சிற்கில்பையவே நோய்திரும் பயமோயில்லை, கடிதமலக்கைகால்தன்வரை

யில்மிற்கில் கனகம்போற்றேகமுமாங் கண்டுகொள்ளு-அடிமுதலாயிர
விமின்றநாளைத்தொட்டு அவிசித்தோடி-ருபத்தெட்டாய்ந்துகொள்ளே,

## இரத்தமேகந்திரத் தாளிசபத்திரிச்சூரணம்.

கொள்ளவேதாளிசங்கழஞ்சதாறு கூட்டுதிரிகடுகுகழஞ்சிரண்டு
அள்ளவேயேலமில வங்கந்தானும் அப்பனேவகைக்குவகை கழஞ்ச
தைந்து-துள்ளவேயிடித்துவடி கொண்டபின்பு துக்குகழஞ்சிராறுசீ
னிகூட்டி-புள்ளன்பாய்த்தின்றுவரில் வாகூபித்தம் ஓடுசலக்கடுப்பிர
த்தமேகம்போமே. ௫௫

## வேதைலிங்கக்கட்டு.

மேகம்போம்சகலநோய்வாய்வுந்தீரும் வேடிக்கைசியிட்டுவித்தை
வாதங்கேளு - பாகம்போமெண்ணுதேகெந்திதாரம் பகருமாப்பொடி
யோடுசிலையுங்கூட்டித்-தாகம்போங்கருவிட்டுஅரைத்துவாங்கிச் சமனு
கலிங்கத்திற்கவசங்கட்டி - ஆகம்போமெண்ணுதேகுக்குடத்தில் அப்ப
னேசாதிலிங்கம்அடைகட்டாமே. ௫௬

## கட்டியலிங்கம் வேதையாட.

கட்டானலிங்கங்காட்டுமுன்னோர்களை-மட்டானதன்பதிவைத்தி
டும்வேதைகேள்-விட்டானகூடனும்வீரமுங்கூட்டிடு- தட்டானதில்லை
தங்கம்போலாடுமே. ௫௭

ஆடவேகெந்தியதிலிஞ்சிச்சாறு - கூடவேவிட்டுக்குழைய அரைத்
திடு-வாடவேசாமம்வளர்த்தவெயில்முகம் - நாடவேயிப்படிநாள்மூன்
றுபாருமே. ௫௮

பாருநீகெந்தகம்பற்பமதாக-சேருநீலிங்கமுஞ்செயமானகெந்தியு
ம்-வாருநீர்பீங்கானில்வளர்குமரிச்சாறும்- ஏறுநீகோழிரத்தமுங்கூட்டி
டே. ௫௯

கூட்டியதனிற்குழம்புஅப்பிரகத்தை-தீட்டுரவிமுகந்தினமூன்று
லர்ந்தபின்-நாட்டிவராகம் நல்லபுடத்திலே-வாட்டியெடுக்கமாசற்றபற்
பமே. ௬௰

பற்பமினிக்கேள்பரந்திடுநோயெல்லாம்- அற்பமிதென்று அசட
ரோயெண்ணுதீர்-கற்பமீதாகுங்கர்மவினையறும்- நுட்பமதெல்லாம்நுகர்
ந்தனன்முற்றே. ௬௧

அகஸ்தியமுனிவர் - அருளிச்செய்த

அவிழ்தசாரம்-முற்றிற்று.

கடவுள் துணை.

—※—

தேரையர் அருளிச்செய்த

# நோயின்சாரம் ௱௩௩.

## கணபதிதுதி.

### வெண்பா.

ஆரியமாம்வாகடத்தி னுட்பொருளையாராய்ந்து
சீரியதாஞ்செந்தமிழிற் செப்பவே-மாரியென
வெள்ளமதம்பொழியும் வேழமுகமுடைய
வள்ளலேயென்மனத்து வா. (க)

அரத்தையை நாவிலிட இருமல் ஆக்கிராணிக்க
பீனிசம் சளிதீரும்.

வாவெனவேசிலேட்டுமத்தால் வந்தயிருமல்களும்-போவெனவே நாவிலிடிற்போகுமே-பாவனையாய்,வாக்கானபீனிசமும்மகத்தாஞ்சளியும்போம்-ஆக்கிராணஞ்செய்யிலரத்தை. (உ)

வாதச்சுரந்தீரக்கியாழம்.

அரத்தைசதகுப்பிசுக்கான்நொச்சிச்சாற்றில்-அரைத்திழையக்காச்சியருந்த-வருத்தத்-தலைவலிகள்நீரோற்றந் தன்னுடனேவாதசுரங்-குலைகுலைந்துபோகுமெனக்கூறு. (௩)

பித்தசுரந்தீரக்கியாழம்.

கூறுகின்றபாவட்டைகொண்டசித்தாமுட்டி-வீரோமம்வேலிப்பருத்திவேர்-காறுகின்ற - நன்மிளகுங்கூட்டிநலமாய்க்கியாழமுண்ண-சென்மபித்தச்சுரம்போஞ்செப்பு. (௪)

சிலேட்டுமசுரந்தீரக்கியாழம்.

செப்புகின்றதிப்பிலியுஞ்சேராடாதோடைசுக்கும்-ஒப்பரியசிற்றரத்தையோமமுடன்-தப்பில்லாக், கண்டங்கத்திரிதேனுங்காய்ச்சிக்குடித்திடவே-தெண்டசிலேட்மச்சுரம்போம்செப்பு. (௫)

சத்தி எரிவாதந்தீரப்பூசல்.

செப்பரியபேரிலந்தைசிறந்தபுளியாரையரைத் - தொப்பரியகாடியுடன்கரைத்துத்-தப்பாமல்,மத்திட்டுத்தான்கடைந்துவந்தநுரைபூசுவிக்கச்-சத்தியெரிவாதமில்லைத்தான். (௬)

## உதாவாயுதீரமருந்து.

தானென்னும்வெள்ளுள்ளிதப்பாதுப்பிற்பொதிந்து-வேனென்னு மக்கினியில்வேகவைத்துத்-தீனென்னும்- இங்குவுடனரைத்துயேற்றநீ ரிற்குடிக்க-வங்குதாவாயுவில்லைமான். எ

## நீர்க்கட்டுதீரக்கியாழம்.

மானேகேள்நீரடைக்கில்வாழும்பசிரியுடன் - தானேகத்திரியினி லைதன்னோடே-பானைதனில்-ஒக்கக்கியாழமிட்டு ஊதினவெங்காரமிட் டுண்-கக்கிக்கடலுடைக்குங்காண். அ

## விரைவாதந்தீரக் கியாழம்.

காணும்புனல்முருங்கைகழற்சிக்கொடிபருப்பு - பூணுங்கொத்தா னுடனேபோர்தசுக்கு-வேணுமெனப்-பண்ணீர்கியாழம் பருகீர்பருகி யபின்-விண்ணில்விரைவாதம்போம்விட்டு. சு

## அசீரணமுங் கிராணியுந்தீரக்கியாழம்.

விட்டவொதியிர்க்கு மேவுகருவேப்பிர்க்கும்-முட்டசுக்குசீரகமு மோதகமுந்-தட்டியிட்டுக் - காய்ந்தநீராக்குடிக்கக்காணுமசீரணமாய் ப்-பாய்ந்தகிராணியும்போம்பார். ய

## பித்தந்தீரக் கியாழம்.

பாரிசைந்தநெல்லிமுள்ளிபாரதனிற்கூவிளமுஞ்- சீரிசைந்தசீரக முஞ்சேர்ந்தசுக்கும்-வேரிசைந்த-சித்தமுட்டிநெற்பொரியுஞ்சேர்த்துக் கியாழமுண்ண-பித்தம்விட்டுப்போகுமெனப்பேசு, யக

## குன்மவலிகிருமிதீரக்கியாழம்,

பேசும்பிரண்டையுடன் பேரிசைந்தவேப்பிர்க்கும்-மூசும்புரசுவி த்துமோதகமும்-வாசிபண்ணுங்-கொள்ளிற்கியாழமதிற்குன்மவலிகிரு மி-விள்ளிவிழுந்தேகுமீது யஉ

## விக்கம் பீலிகை அக்கினிமந்தந்தீரமூக்கிரட்டைவேர்,

மீதுவெனுங்கண்ணினடுவேரினைச்சுன்னம்பொதுக்கிப் - போத மெனுந்தியிற்புடமிட்டு-ஊதியுண்ண-வீக்கம்பீலிகையுடனேமீறுமக்கி னிமந்தம்-பார்க்கப்பறந்துபோம்பண், யங

## விக்கலும் சத்தியுந்தீரப்பொடி,

பண்ணும்பரித்திவிரைபாரிலுள்ளநெற்பொரியும்-எண்ணுசிறுதி ப்பிலியும்ஏலமொடு-நண்ணுபொடி - சர்க்கரையுந்தேனுந்தளாக்குழை த்துண்ண-விக்கல்சத்திபோகும்விரும்பு, யச

## பித்தந்தீரப் பொடிமருந்து,

விரும்புகின்றசீரகமுமேன்மையுள்ளநெல்லிமுள்ளி-பொருப்புசு க்கேலம்பொடிசரியாய்-நிரம்பிடவே-சர்க்கரையுந்தேனுந் தளாக்குழை த்துண்ண-தொக்குடனேபோம்பித்தஞ்சோம்பு, யரு

அஷ்டகுன்மந்தீரச் சூரணம்,

சோம்புசிறுமண்ணேஞ்சுத்திபொடிகாயுருவிச்-சாம்பல்மிளகுபொடிசமனுய்-தேம்பிடவே-எட்டிலொன்றுகாய மிட்டிணக்கியோர்கழஞ்சு-அட்டகுன்மம்போமேயலேந்து, ௰சு

அண்டவாதந்திரப்பொடி,

அலையுங்கருவளேயலார்க்கப்பொடிசெய்து-நிலேயுமிளகுபொடிநேர்சரியாய்-மலேயில்-பெருங்காயங்கூட்டியுண்ணப்போண்டவாதம்-வரும்பானேபோல்வீக்கம்வாடும், ௰எ

எரிகுன்மந்தீரக்கியாழம்,

வாடுகின்றயிந்துசுக்குவாரிக்கியாழமதில்-தேடுகின்றகாயந்திப்பிலிசேர்த்து-நாடுபுகழ்- செப்புக்காத்தீர்செலுத்தீர்செலுத்தியபின்-வெப்பெரிகுன்மம்போம்விரைந்து, ௰அ

அசிரணம்-சகலதோஷம்-சூலே-சுரங் கிருமிதீர,

விரைந்துமிளகரைத்து வெந்நீரினிற்கரைத்து-அருந்தவசிரணங்களாலும்-வருந்துஞ்-சகலதோஷஞ்சூலேசகலசுரமுங்கிருமி-பெலஞேடிப்போகுமாம்பேறு, ௰சு

சுவாசகாசந்திரக் கியாழம்,

பெறுவீர்பிராய்சூரை பேரிசங்குகூட்டி-மாறுநீர்விட்டாவிவாங்கிக்-கூறியதில்-திப்பிலியும்வெங்காரந்தேன்விட்டுமென்பொடியாய்-ஒப்புசுவாசக்காசமோடும், உ௰

வாயு கரப்பன் வீக்கந்திரக்குடிநீர்,

ஓடுகின்றசாரடையும் உப்புமரிதகியும்-வாடுகின்றசுக்கும் வகைகுடிநீர்-தேடி-மறுகமறுக்கக்குடிக்கவாயுகரப்பன்வண்மை-பறுபறுகெனக்கழியும்பார், உக

மேகம் உட்காச்சல் பிரமியந்தீர,

பாரீரோமேகம்வந்தால்பண்புபேயம்பழத்தில்-சேரீரோசர்க்கரையுஞ்சீரகமும்-நாரீரோ-யுண்டாக்காற்போகாதோவுட்காச்சல்பிரமியமுங்கண்டாக்காற்போகாதோகாண், உஉ

ஈளை இருமல் காசந்திரப்பிட்டவிநீர,

காணீராடாதோடைகண்டங்கத்திரிதுளசி- தூணீர்பிட்டவிநீரிற்றிப்பிலித்தூள்-பேணியிடில்-கொக்குக்கொக்கென்றிருமுங்கொடுங்காசமீளையது-பொக்குப்பொக்கென்றேடிப்போம், உ௩

இரத்தபித்தந்திரக்குடிநீர்,

போதிரோதோடையிலேபோந்ததொருமுந்திரிகை - சேதீரோநற்குடிநீர்செய்திடுவாய்-மாதிரே-அக்காரங்கூட்டியருந்திருந்தியபின் - உக்காராத்தபித்தமோடும், உசு

ஐயக்இருபதுக்கீரச்சூரணம்.

ஓடுகின்றதாளிசப் பத்திரியு மோர்மிளகும் - தேடுகின்றநாகஞ் பூதிப்பிலியுங்-கூடயில், கூகைநீரோல மிதிலவங்கந்தான்கூட்டி, பாக மாய்ச்சூரணமும்பண். (உ௫)

பண்ணியபின்னக்காரம்பாகமதாய்க்கூட்டி, யுண்ணக்கழஞ்சுதே னுள்ளிட்டே-நண்ணவே-நானுனுபானத்தில் நாவிற்பருகியிடப்-போ ஞல்நாலையமேபோம். (உசு)

இருமலுப்பிசந்தீரச் சூரணம்.

போமேகடுநெல்லிபோற்றரியதான் பிசிங்கி- தாமேநற்கோஷ்டஞ் சடாமாஞ்சில் - ஆமே,திரிகடுகிந்திப்புசிறுதேக்குகண்டம்,திருகிடவே சூரணமாய்ச்செய், (உஎ)

செய்தமருந்துதின்னுமனுபானம்.

செய்தமருந்துசெலுத்தவிரும்பிக்கேள்-எய்தபிஞ்சிச்சாறுந்தேனி ட்டுண்ண-ஐயமறக், குத்திக்குத்திற்றிருமுங் கூட்டுப்பிசச்சுவாசங்-தத் தித்தத்திற்றோடுந்தான். (உஅ)

தானேயடம்புவிளாதப்பாமலோர்கழஞ்சு -மானேமறுநீரால்வாங் கியுண்ண-நானேசொல், எழுஞாயிறுகிரந்தி ஈளையெலி கடியும், விழு மாறுசொன்னேன்கேள்வேண்டு. (உகூ)

ஈளை-பஞ்சகாசம்-விக்கல்தீரஎண்ணை.

வேண்டும்பெருங்காயம் வேலியிலைச்சாறும்-ஆண்டுசென்றஆம ணக்கினெய்கூட்டி - பாண்டமதில், இட்டேவடித்துண்ணஈளைபஞ்ச காசம்விக்கல்-விட்டேகிப்போகும்வெருண்டு. (௩௰)

பஞ்சசுவாசகாசந்தீரப்பொடி.

வெருண்டமிளகோர்மூன்றுவிளாயழிஞ்சிலெட்டு -திரண்டபொ டிகழஞ்சுதேனிற்கொள்-மருண்டிதனில், பட்டேன்பட்டேனென்னும் பஞ்சசுவாசக்காசங்-கெட்டேன்கெட்டேனென்னுங்கேள். (௩௧)

சிலேட்டுமத்தால்வந்தநோய்தீரஎண்ணை.

கேளுங்கையாந்தகரைச் சாறுங்கிளர்கடுக்காய் - நீருநல்லெண் ணெயுடன்வெந்நிறக்கி-காளுமெட்டுத், தின்னத்தினங்கழஞ்சு சிலேட் டுமத்தால்வந்தபிணி-சொன்னபோதேயோடுநதுது. (௩உ)

ஈளை இருமல் சுவாசகாசந்தீரக்கிருதம்,

தூதளையின்பழாசமுஞ் சுத்தாவி னெய்பால்- நீதிலிருசிரகந்திரிக டுகு-மாதேகேள், காகரவெல்றேபெழும்புங் காசசுவாசம்ஈளை பாபா வெல்றேயேகும்பார். (௩௩)

சுரச்சுவாசந்தீரச்சிங்கித்தயிலம்.

பாருமாரத்தைப்பழச்சாற்றில் மூப்பலையுந் - தேருதிப்பிலிமிளகு சேர்ந்தசுக்கு-மூரியதோர் - தேத்தாம்பழமரைத்து சிங்கியிறக்கி-வார்த் தாற்சுரசுவாசமாறும், (௩௪)

வாதபித்தம்-ஐயம்-அஸ்திசுரம்-தாகசுரந்தீர

ஆடாதோடைக்கிருதம்.

மாறுந்தோடைச்சாறும்வந்தாவிநெய்பாலும் -தேறுந்திப்பிலி யானைத்திப்பிலியுங் - கூறுங், கொடுவேலிதன்னுடனே கூட்டிநவாச்சாரம்-வடிவேகவேகவேவை. (௩௫)

வேகவைத்தநெய்யைவிரும்பியிருநேரம்- பாகம்வைக்கில்வாதபித் தம்பாலையம்-தேகமதில், வந்தவிஷமசுரம் அஸ்திசுரந்தாகசுரம்-பிந்தா மற்போகும்பிரிந்து. (௩௬)

குளிர்சுரம்-தாபசுரந்தீரவேர்.

பிரிந்துயிளவெந்நீரிற் பின்முதியார் கூந்த- லரிந்து மதன்வேரா யரைத்து-பரிந்துண்ண, சீறுசுரமுங்குளிருந் தீண்டாத்தாபச்சுரமுங்- கீறுடனேபோமிதனைக்கேட்டு. (௩௭)

அசீரணந்தீரமருந்து.

கேட்டவெள்ளைக்காக்கணம்வேர்கேளுநீநன்மிளகு-கூட்டியிளவெந்நீரிற்கொண்டுவிட - நாட்டைவிட்டுப், போமேயசீரணமுன்புகுமே சமுத்திரத்தில்-நாமேயுரைக்கக்கேளநன்று. (௩௮)

மந்தம்தீரக்கியாழம்.

நன்றாயவேர்க்கொம்புநற்சாறடைவேம்பும்- ஒன்றாய்க்கியாழமிட் டுண்டுவிடி-லன்றேதான், ஓடுமேமந்தம்ஒழியுமேநாட்டைவிட்டு-வாடுமேகெட்டுமனம். (௩௯)

விஷந்தீரநசியமுங் குடிநீரும்.

மனமேகையாந்தகரைச்சாறுமகிழ்வித்துங்-கனமாய் நசியம் விஷங்காணுது - சினமாக-உப்புகரைத்தவெந்நீருட்கொண்டுவாந்திசெய்ய,தப்பாவிஷங்கள்சமிக்கும். ௪௰

பிரமை தாகம்விக்குழியிருமல்தோஷந்தீர.

சமிக்குமிரும்பதனைத்தப்பாமற்காச்சி - யமுக்கியேமோரிலநந்தில்-இமிழ்க்க, பிருமைவிட்டுத்தாஹெடும்பேசுந்தாகம்விக்குழி - இருமல் தோஷந்திருமெல்லாம் ௪௧

கிரந்தி எழுவானம் வாதபித்தசிலேட்டுமந்தீர.

எல்லாக்கிரந்தியும்எழுவானம்வாதபித்தம், பொல்லாச்சிலேட்டுமமும்போய்விடுமே-வில்லாரும், நிழலுருவத்தாளேகிறைபங்கயமாதினெழிலுருவத்தாளேயியம்பு. ௪௨

வாதகரப்பன்குணம்.

இயம்புந்திமிர்காய்ச்ச லெங்கும்வீக்கத்திரட்சி, தயங்குங்கணுத் தோறுந்தான்கடுப்பாம்-பயம்படவே. வந்தவரைக்கணத்தில் வாதகரப் பன்வண்மை, செந்தாமரைமுகத்தாய்செப்பு. சஙூ

செங்கரப்பன்குணம்.

செப்புந்தலையெரிப்பு சேருங்காய்ச்சல்தினவு-வெப்புள்ச்சலுந்த ரித்துவீராக, தப்பாமல் வாந்திவரும்நீர்சிவக்கும்வருகுமலஞ்சிக்கலிடு ம்,சேர்ந்துமந்தசெங்கரப்பன்திண்ணம். சச

இதுவுமது.

திண்ணஞ்சேர்செங்கரப்பன் செய்யும்வகைநெஞ்சுகம்மல், பண் ணும்வாயுங்கிரந்திப்பண்ணிவிடும்-நண்ணுதலே, மண்டைவலிக்கும்பு டைக்கும் வார்காதிற்சீயோடுங், கெண்டைவிழியாயிதனைக்கேள், சடு

தோஷக்கரப்பன்குணம்.

கேளாய்குளிர்காய்ச்சல்கீழ்வருமேகண்டுகெழல், மீளாவிஷம்போ ல்விரைந்துவரும்-நாளாகப், பூதம்போல்வீங்கிவற்றிப்புண்போலெங் குந்திமிர்க்கும்,ஓதுந்தோஷக்கரப்பனுற்று. சசு

அரிகரப்பன்குணம்.

உற்றுவரிகரப்பன்ஓதக்கேளொண்டொடியீர் - மற்றுலிங்கம்யோ னிபுற்றும்வந்திடும்புண்-சற்றெண்ணி-ஆறுமற்புண்களைக்கும் ஆனக ருவழிக்கும், மாறுதவிக்குணத்தின்வாறு. சஎ

கரப்பன்தீரச்சூரணம்.

வாறுகொடுவேலிகுறிஞ்சாவக்கணைத்தியிவை,கூறுகருவேம்புகுட சப்பாலை-சீறு, சிவனார்தன்வேம்புஞ் செங்கத்தாரிமிளகும், இவையே கொள்பல்கரப்பனேகும் சஅ

காப்பன்தீரஉள்ளுக்குமேலுக்கும்-எண்ணெய்.

ஏகுங்கருநொச்சிலேறழிஞ்சில்சாணக்கி, யாகுங்காந்தைசின்னி யாமணக்கில்-பாகமாய்-வடியீர்வசம்புள்ளிவாள்கடுகுகூட்டிக்- குடி யீர்பூசீர்கரப்பன்கூறு. சக

பலகரப்பன்திர எண்ணெய்.

கூறுசெங்கத்தாரிபட்டைகூர்மிளகுசின்னியிலை, வீறுசிறுகுறிஞ் சான்வேர்கூட்டித்-தேறுமுத், தெண்ணெய்விட்டுக்காய்ச்சி லிந்தும்ப ல்காப்பனெனில், திண்ணுவிடிலென்றுந்தினம். ருய

வீக்கந்தீரக் குடிநீர்.

தினந்தாளிசங்குசுரைசிறுநெருஞ்சில்தூது, மணந்தாலம்நீர்முள் ளிமாமாலே,கனந்துவரில்,வெண்காரம்மென்பொடியாய்மேவுகுடிநீரிவி டில்-கண்காணுவீக்கம்போங்காண். ருக

விக்கந்திர உள்ளுக்கு மேலுக்குமருந்து,

காரம்எவட்சாரங்கனத்தயிந்து மென்பொடியாய், ஈரவுள்ளியின்சிச்சாறிதனிலிடில்-பாரமுள்ள,வீக்கம்வற்றித்தூக்கமுண்டாமேலும்பூசமிகழ்ந்து, வாய்சகவேசாய்க்குமலம். ருஉ

மலசலங்கட்டி விம்மிவீங்கியகாப்பன்தீர,

மலநீரடைத்துவிம்மிவாயுகாப்பன்வீங்கில், பெலமாமரிதகியைப்பிட்டிட்டு-குலஆவின், கோமியத்திற்கூட்டிக்குலவியருந்திடவே, சாம்மதிற்போந்திண்ணந்தான், ருங

மலக்கட்டால்வீங்கியதுதீரஎண்ணெய்,

திண்ணஞ்சிறுகுறட்டைதேங்காய்சங்குள்ளி, தண்ணந்தனித்தனியேசாறுழக்காய்-பெண்ணேகேள், ஆமணக்கினெய்ரோணி யன்போடுகாய்ச்சியுண்ண,சாமமதில்வீக்கமலஞ்சாய்க்கும், ருச

கிரந்தி-புண்-சூலை-வயிற்றுவலி-வாதகுஷ்டந்தீர

பட்டைச்சூரணம்.

சாய்க்கும்படிகேளாய் தான்கிரந்திபுண்சூலை, வாய்க்கும்வயிற்றுவலிவாதகுஷ்டம்-நீக்கமருந்,துண்ணுவுலகத்திலுய்யாமல்மானிடர்க்குப், பண்ணுப்பட்டைச்சூரணமும்பார்த்து, ருரு

பார்த்துகடைமருந்துபஞ்சலவணம்விளங்கஞ்-சார்த்துகருஞ்சீரகமுந்தாளுமைம்-ஏர்த்தபடி,இட்டுபட்டைச்சூரணமுமிரண்டுபங்கிற்கலந்து - தட்டிக்கொடுதின்னத்தான். ருசா

தின்னுதேன்நெய்மருந்துசேர்ந்தபடிமுக்கழஞ்சு-பன்னுதான்காலைதனிற்பாங்குடனே - அன்னங்கேள், பத்தியந்தான்செங்கீரைத்தண்டுபலாதுவ்வா-உத்தியநெத்திலிசுறுவுண், ருஎ

மலக்கட்டு வெப்புவாயுதீர சிவதைவேர்ச்சூரணம்,

உண்ணஇலவங்கம் ஓதுபலைமுக்கடுகு-திண்ணேலம்நாகப்பூசேர்ந்தமுத்தம் - பண்ணுபொடி, பாலுடனேநற்சிவதைபாலுடனேசுத்திபொடி, நாலுடனேமுன்பொடிசேர்நன்று, ருஅ

நன்றுபொடிமுக்கழஞ்சு நாலுந்தேன்சர்க்கரையில்-தின்றுவிடும்போதேசிதறிவிடும்-என்றுந்தான் - மீளாமலக்கட்டு மிகுத்தவெப்புவாயு-கீளாகநோக்குங்கிரந்தி. ருசு

கிரந்திகட்டுச்சூலைதீர,

கிரந்திகட்டிச்சூலைதனக் கேர்க்கவாச்சாரம் - பொருந்துமிந்துபோற்றரைக்கும்போது-மருந்துபச்சை-நாவியடப்பம்விரை நற்கோஷ்டம்வாளமிவை-மேவுநிம்பச்சாற்றிலிட்மீளும், சுய

வாதந்தீரச்சூரணம்,

மீளுமிலைக்கள்ளிவேர்ப்பட்டையையுலர்த்தி-தூளாகவேயிடித்துத்துய்யபொடி-கேளிரண்டு, காசத்தனையெடுத்துகாலையிற்றேனிலுண்ண,தேகத்தில்வாதம்போந்தேறு. சுக

மகோதரந்தீரச்சாறு.

தேறும்பேய்ப்பீர்க்கின்காய் சிதறயிடித்துப்பிழிந்த - சாறுபரிவு டனேதானுழக்கில்-கூறுகின்ற, நற்பெருங்காயங்கடுகு நற்கழஞ்சிகொள்மூன்றுண்-சொற்பெருமகோதரம்போஞ்சொல் (சுஉ

கிராணிதீரக் கருங்கோழிஎண்ணெய்.

சொல்லுங்கருங்கோழித்தோல்போக்கியுட்சதையில் - நில்லோமுக்கடுகுநேர்காயம்-நல்லாய்கேள், பஞ்சலவணந்தயிரிற்பண்ணுமெண்ணெய்தான்குடிக்க-அஞ்சுமரிசக்கிராணியாறும். (சுங)

கிராணிதீர உடும்பெண்ணெய்.

ஆறுமுடும்புசதையன்பானமுக்கடுகு கூறுங்கொடுவேலிகூர்வசம்பும்-வீறுடைய - சீரகமுமுள்ளியொடு சேர்த்தரைத்துமோருமெண்ணெய்-கூரணமாங்கிராணிகுணமாம். (சுச)

வாயுக்கிராணிதீரநத்தைச்சதையெண்ணெய்,

குணமாநத்தைச்சதையுங் கூறுமுக் கடுகோமம் - கணமானதிரிபலைசார்சீரகமும்-மணமாகுங், காயங்கடுகிந்துகாரெண்ணெயிற்காய்ச்சில்-வாயுகிராணிப்போகும்வண்ணம். (சுரு)

கிராணிதீர எண்ணெய்.

வண்ணக்காயங்கடுகு வாலிந்துநாற்பலமும் - திண்ணந்தயிர்நீரிற்செய்குடிநீர்-நண்ணியதிற்-சுக்குடனேமூன்றுபலந தோற்புங்குஞ்சாடையுந்-தக்கவட்டத்திருப்பிவேர்தான், (சுசு)

வேருங்கிராம்பும்வெண்சாதிபத்திரியும்-சேர்மோதங்கச்சோலந்திரிபலையுஞ்-சாருங்,கருவேப்பிலைகடுக்காய்காணும்எவக்ஷாரமெண்ணெய்-அருநெய்யிற்கிராணியகலும் (சுஎ)

வாயுக்கிராணிதீர எண்ணெய.

அகலுநுணச்சாற்றிலான் தயிர்நீர்சரியாய் - புகலுமுக்கடுகிந்துப்பொடுவிடையம் - இகலும், வடிவுடையசாதிக்காய்வருமெண்ணெய்கொள்ளப்-பொடிபடும்வாயுக்கிராணிபோற்று. (சுஅ)

கிராணிதீர எண்ணெய்.

போற்றும்பிரண்டைசுக்குப்பொடிமிளகுதிப்பிலியும்- ஏற்லுமெவக்ஷாரம்இங்குசீரகமும் வீற்றிருந்த, விடையந்தயிரெண்ணெய்வேகவைத்துக்கொள்ளப்-பொடியாங்கிராணிவிட்டுப்போம். (சுக)

வாதகுன்மந்தீரப்பேய்த்தும்மட்டிக்காய் எண்ணெய்.

விடுபேய்த்தும்மட்டிக்காய்வேகவைத்துமுப்பலையும்-இடுவாய்திரிகடுகும்இந்துப்-பொடிகூட, சிற்றாமணக்கெண்ணெய்சேர்த்துவிடில்வாய்வுகுன்மம்-பெற்றார்மலங்கழியும்பின். (எo)

பக்ஷிதோஷந் தேரைத்தோஷங் காமாலைதீர,

பின்னுமிட்டான்சாற்றில்பெற்றாவினெய்சேர்த்து-பன்னுங்கிழங்

கரைத்துப்பால்கூட்டி-சொன்னபடி, பாகமிட்டுத்தின்றுவிடில் பக்ஷி தோஷந்தேரை-யேகுமதுகாமாலையே. (எக)

பாண்டு பித்தங் கிராணி தசமூலந்தீர.

காமாலைபோங்கடுக்காய்கியாழத்தில்நெய்விட்டு - யோமேகடுநெல்லிப்போதரைத்து-வேமதனிற், பக்குவம்பார்த்தேவடித்துண்பாண்டு பித்தங்கிராணியறும்-திக்கெனப்போமூலந்திசை. (எஉ)

வீக்கந்தீர எண்ணெய்.

திசையாமூலைப்பாலிற்சேர்த்திடெண்ணெய்பாதி- இசைபஞ்சதிரவியம்பாரிருவேலி-அசையா, கப்புமணமஞ்சள் கடுமுகங்காய்ச்சியிடில்-ஒப்புடனேவீக்கம்விடுமோது. எங

நீர்க்கழிச்சல்தீரமருந்து,

ஓதும்வெண்குன்றிவிரை தோற்போக்கியும்பருப்பு - வாதுபுளிவிரைத்தோல்மத்தித்து - மேதியெனும், வெண்ணெயிலோர்கழஞ்சிவெள்ளம்விடுநீர்கழிச்சல்-மிண்ணுவிடுந்தேன்மொழியாய்நேர். எச

பெரும்பாடுதீரநெய்-

நேராகுராவற்றேல்நீண்டவொதித்தோலும் - போரகவேகுடிநீர்பின்போட்டுச்-சீராக, ஆவின்பால்நெய்மதூரம்அரைத்துமேபாகமிட்டுண்-தேவிபெரும்பாடதுசெல்லும் எரு

விப்புருதிதீரநெய்.

செல்லாதுவிப்புருதி சேருந்திரிபலையும்-வல்லாகக்காய்ச்சிவடித்துண்ண-நில்லுமென, முன்புசொன்னபூவரைத்து முற்றுநறுநெய்பாலில்-அன்புடனேகாய்ச்சியருந்து. எசு

கர்ப்பவிற்புருதிதீர.

அருந்தும்பொழுதுகர்ப்பவிற்புருதியாறுந் - திருந்துநறு நெய்நாழிசேர்த்திடுவாய்-திருகுகள்ளிப், பாலுழக்குக்கூட்டிப் பழம்புளியுஞ்சேர்கூட்டி-சேல்விழியாய்காய்ச்சிடுசேர்த்து, எஎ

வாதந்தீர எண்ணெய்.

சேர்த்துவந்தவாதஞ் சிதறமருந்துரைக்கில் - ஏத்துமிலைக்கள்ளியெருக்கின்சாறும்-வீத்திதனில், விருண்டாமணக்கெண்ணெய்விட்டுக்காய்ச்சிட்டருந்த-அருண்டுவிடுமென்றேயறி, எஅ

மூலந்தீரக் கிருதம்.

அறியும்பிரண்டையிலை யாமணக்கின்தாளும்-செறியும் புளிநறலைசேர்வேலி-குறுகு-பொடி.அக்கிராகாரம்போற்றுமெண்ணெய்தேன்நெய்-திடமானமூலம்போஞ்சேர். எகூ

காதெழுச்சிதீரத் தயிலம்.

சேரொருக்கின்சாற்றேடுசேர்த்திடெண்ணெய்சுக்குள்ளி-கூர்வசம்புங்குன்றிமுத்தங்கோஷ்டமுடன்-நேராக, இந்துப்புதிப்பிலியுமெரித்துமேகாதிலிட-உந்திவிடுமெழுச்சியுரை. அய

## ஜன்னிதீர உள்ளுக்குமேலுக்குந்தைலம்.

உரையும்வசம்புள்ளியுற்றகடுங்காயந், திரையூநாகம்பரப்பின் சீர்கண்டங்-கரைய, அரைத்துவடிவேம்பின்நெய்யதிற் சன்னிபோகும்-தூத்திடப்பூசிட்டுக்கொள்ளூறு. அ௧

## அதிசாரந்தீர மருந்து.

தூறுமதிசாரந்துலையமருந்தூரைக்கில்-ஆறுமாதனைத்தோலரைத்துருட்டி-கூறும், ஆன்பாலிற்கொள்ள வகலும்பதினெட்டுந்-தேன்பாகுமொழியீர்செய்யீர். அ௨

## கல்லடைப்பு நீரடைப்புதீர சாறு.

ஈருள்ளிச்சாறுமுழக்கோ டேற்றகாரங்கழஞ்சு - சார்குக்குடத்தினெச்சந்தான்கழஞ்சு, வார்முலையாய், ஒன்றாய்விளாவியுடனருந்தக் கல்லடைப்பும்-சென்றேடும்நீரடைப்புந்தேடி. அ௩

## நீரடைப்புதீர மருந்து.

தேடுகஞ்சாபத்திரியிற் சேர்துருசு சோகிபத்துப் - போடுசுட்டுத்தேசிபழம்பூஞ்சாறு-கூடவிட்டு, மேலும்முடவ்விலைப்பால் விரும்பிமறுநாளருந்த-வேலையிற்போம்நீரடைப்புவிட்டு. அ௪

## நீரடைப்பு கல்லடைப்புதீர கியாழம்.

விட்டுநெருஞ்சியின்வேர்வெண்சுரையின் தண்டுசுக் - கிட்டுகடுதான்றிகீழ்க்காய்வே-ரிட்டசிறு, பூளையின்வேரோடு புகலுஞ்சிறுகிரைவாளைவென்றகண்ணுய்நீர்வார்த்து. அரு

வார்த்தநீரொட்டொன்றாய் வற்றியபின்றானிறுத்து - போத்தபசுவெண்ணெயுமேபோட்டருந்தப்-பார்த்து - திகைத்தோடுநீரடைப்புஞ் சேருகின்றகல்லடைப்பும், பகைத்தோடுஞ்சொன்னேன்பரிந்து, அ௬

## பெரும்பாடுதீரமருந்து.

பரிந்துமுக்காவேளைவேர்ப்பட்டைதனையெடுத்து - கரைந்துபச்சைநெல்லரிசிக்கழுநீரிற்-பிருந்த, அரைத்ததனைமுக்கழஞ்சுஅந்திசந்திகொள்ள-உரைத்தபெரும்பாடுவிட்டோடும். அ௭

## ஓடுகுன்மந்திரப்பொடி,

ஓடுகுன்மங்கொண்டு உழலுகின்றமங்கையரோ - தேடுகுப்பைமேனிச்செருப்படையும்-நாடுதனிற் கையாந்தகரைக் கருதிப்பொடிசெய்து-மெய்யாததேனேடுண்விரும்பு. அ௮

## இரத்தமூலக்கிராணிதீரஎண்ணெய்,

விரும்பிரத்தமூலம் வீழுங்கிராணி-வருந்திறற்கொள்ள மருந்து,

திருந்துங்-கொட்டைக்கரந்தைகொடியாற்சீரகமும் - இட்டெண்ணெய்
காய்ச்சிடிலேகும், ௮௯

வாக்ஷியிருமல்தீரலேகியம்,

ஏகும்வாட்சியிருமலிவைதனக்கு-பாகுநறுதாளிபனையின்வொல்ல
ம்-வாகுடனே,பச்சரிசிநெய்யும்பதம்பண்ணலேகியத்தை, நிச்சயமாய்
த்தின்றிடநீறும், ௯௰

அஸ்திசுரந்தீரமருந்து,

நீறுகின்றஅஸ்திசுரம் நிச்சயமாய்த்தான்மாற, பாறுஞ்செண்ணக
ைப்பழச்சாறு-சோறுவரிக், கற்றாழையுங்கடுக்காய்கருவேம்பின்பட்
டைபொடித்-தத்திலேயிட்டருந்தத்தரிக்கும், ௯௧

வலிகுன்மந்தீரவெண்ணெய்,

அரியபசும்பாலிலானதிருகுகள்ளி-யுரியபாற்சேர்காய்ச்சியொன்
றாய்-வருதயிரில்-மத்திட்டுத்தான்கடைந்து வந்தவெண்ணெய் கொண்
டுவிட-உற்றவலிக்குன்மமோடும், ௯௨

பிள்ளைபெற்றவயிற்றில்சோரைதங்கியதுதீரக்குடிநீர்,

ஓடும்பிள்ளைப்பிறந்தவுறுவயிறுதான்பழுத்து- கூடுகின்றசோரவை
யதுகூண்டெடுத்தாற்-போடுசுக்கு- வெள்ளைவெங்காயம்மிளகுவேலிப்
பருத்தியிலை-கொள்மூன்றுநாள்குடிநீர்கொள், ௯௩

பித்தகாமாலைதீரப்பொடி,

கொள்ளேதிரிபலையுங் கூட்டுகிரிப்பானுமஞ்சள்-விள்ளேயோம
ப்பொடியுமீதிதனை-மெள்ளவே, தூளானதையருந்து தூங்குங்காமா
லைபித்தம்-வாளைவென்றகண்ணாய்மருந்து, ௯௪

கர்ப்பவிற்புருதிதீரமருந்து,

வருந்துகருவேல்வேர்த்தோல் மானேயீதல்லால், விரும்புகருங்
காக்கணத்தின்வேர்த்தோல்-இருந்தவே, மூன்றுமாதக்காடிமூன்னீரதி
லரைத்தீ - தோன்றுகர்ப்பவிப்புருதிசோம்பும், ௯௫

குற்றிருமல்தீரக்கிருதம்,

சோம்புநிலைவாகையின்வேர் துய்யதிரிகடுகும்- ஆமாவினெய்யில
ரைத்ததனை தேம்பானத், தேனிற்குழைத்தருந்தத் திருமேகுற்றிருமல்
வானிற்போய்விடுமாம்வண்ணம், ௯௬

நீர்கடுப்புத்தீரமருந்து,

வண்ணமுத்தக்காசும் வருந்தாவரைவிரையுந்- திண்ணமுற்றதேற்
றுவின்சேர்விரையும்-திண்ணு, கனிபுளியின் கொட்டைத்தோல்கடுவி
னாநீர்சேர்த்தரைத்துப் புனியில்வைத்துண்ணீர்க்கடுப்பாறும், ௯௭

## பெரும்பாடுதீர தேற்றுவிரைலேகியம்.

பாறும்பெரும்பாடுபாரமாய்த்தானெடுத்தால்-ஆறுக்தேற்றுவிரை யைத்தெடுத்துக்-கூறும்-பதக்குநீர்விட்டுப்பரியுடனேலேகியஞ்செய் திதக்கமாய்த்தானருந்தேகும். சுஅ

## பேய்நாய்கடிதீர மருந்து.

ஏகும்எருக்கின்வே ரினியஇலைப்பழுப்பும்-ஆகும்புன்னைக்காயத ன்பருப்பும்-வாகா-யரைத்தமருந்ததனை யவலிற்பிசறியுண்ண-வருத்து ம்பேய்நாய்க்கடியைமாற்றும். சுகூ

## பெரும்பாடுதீரநெய்.

மாற்றுநெய்பால்நீர்வள்ளிமானேயதன்சாறும்-போற்றுதுத்திவே ர்தன்னிற்பூண்டதோல்-காற்றிசையில்-வாதமுசுக்கையின்வேர் மானே நன்னாரியின்வேர்-அந்தமாகுங்கிழங்காம், எ0

ஆம்பூமிச்சர்க்கரையதாகுங்கிழங்கொடுதா-னும்பூமியிற்பனையின ற்கிழங்காம்-ஆம்போது- நெய்யிலரைத்தேகாய்ச்சிநேரேயருந்தியிடச்- செய்யபெரும்பாடுவிட்டுச்செல்லும். எக

## நீரடைப்புகல்லடைப்புந்தீரமருந்து

செல்லுமேநீரடைப்பு தீரப்பெருகுறிஞ்சான் -கல்லத்திப்பட்டை. கடுகுடனே-சொல்லுந்-திரிகடுகுநாயுருவிசேர்கொளிஞ்சிவேரும்- உரி நீரைவிட்டிட்டுடனே. எஉ

உடனேதான்காய்ச்சியத னுட்சோகிசுட்டிட்டு-திடனுய்வடித்தத னிற்சேர்க்கக்கேள்-மடநல்லாய - காரம்பொரித்திட்டுக்கருதியருந்திட வே-கூர்கல்லடைப்புவிட்டுக்கூடும். எங

## கல்லடைப்புதீரமருந்து,

கூடுகுமரிச்சோறுங்கூறுகருஞ்சீரகமும் - நீடுபஞ்சதாரையுமேநீ கூட்டிப்-போடவே-கல்லடைப்புமாயுங்கடியபொடிகாரமதை -அல்லி ளவெந்நீரிலருந்து. எச

## நீரடைப்புதீரக்குடிநீர்.

அருந்துசிறுபூளையின்வே ராணதழையெல்லாந்-திருந்தியேபான த்திற்சேர்த்து-பரிந்தெரித்து-நாழிநீரொன்றாய் நாள்நாலில்நீரடைப் புப்-பான்மொழியேபோகுமிதைப்பார். எரு

## மூலப்பிரமியந்தீரமருந்து,

பாருமேமூலம்படர்ந்தபிரமியத்திற்-சேருமேதிரிபலையுஞ் சித்தா த்தை-சாருமே-ஆதளையினுற்றகிழங்காகுமக்கிழங்கு-நீதமுடன் கூட்டி யுண்நீதான். எசு

## வாட்சியாலுடம்புலரால்தீரக்குடிநீர்.

தானேவாட்சியாற் சற்றுடம்புவற்றுந்-தேனேயொருபடிநீர்சேர்ந்

கடுப்பில்-மானே-யுழக்காகக்காய்ச்சியதி லுற்றவெண்ணெய்தேசிப்-ப ழுத்தளவுவிட்டருந்தப்பாயும். ௱எ

பாயுமதன்பின்புபண்பிறைலின்னுமருந்-தோயாதசுக்குமிளகோம மூடன்-காயாத-வெள்ளறுகுதூதுவளைமீறுகடுக்காய்காயம்- உள்ளசிவ னாவேம்போடு, ௱அ

ஓடுவளைநாகணமும்ஒக்கவேதான்கூட்டி-நீடுமிழலதனில் நீயுலர்த் திக்-கூடவே-சூரணமாய்ச்செய்ததனைச் சூட்டவெருகடியாய்-காரணத் தினுள்ளபடிகாண். ௱கூ

நீர்கடுப்புதீர மருந்து.

காணெருக்குப்பாற்றுளியைக்காலில்பெருவிரற்கண்-பூணுநகக்கண் ணிரண்டிற்பொதிகுத்தி-யூணப் - புளிக்கொட்டைத்தின்றுவிடிற்போ குமேநீர்க்கடுப்பு-அளிசேர்குழன்மாதேயன்பு. ௱௰

பித்தமயல்தீரமருந்து.

அன்புதுளசிச்சாறும்ஆனதோர்சர்க்கரையும்-இன்புதேசிப்பழச் சாறீதெல்லாம்-தென்பாக-உண்ணவேபித்தமயலோடுமெனவுரைத்த - வண்ணமிதுவென்றுசெப்புமான், ௱௰க

குன்மந்தீரமருந்து.

செப்புபெருந்தும்பையதிற்சேருங்கொழுந்துசுக்கோ - டொப்பு வெள்வெங்காயமிளகோமமுடன்-தப்பா-வசம்புடனேகூட்டி வருமெ ருமைமோரிற்-பசம்பவேபாய்ச்சுகுன்மம்பாயும். ௱௰உ

வாயுஸ்தம்பனநோய்தீரக்குடிநீர்.

பாயுங்கழற்சிப் பருப்புடன்சார்வேளைவேர்- ஏயுமிளகுசுக்கோடி ந்துப்பு-தூய-பெருங்காயம்வெள்ளுள்ளி பின்வசம்புகூட்டி-சரியாய்ந வபாண்டந்தன்னில். ௱௰௩

தன்னிலரைத்ததனைத்தான்வெள்ளாட்டின்பாலில் - மின்னேயெ ட்டொன்றாகவேகவைத்து-சொன்னேன்-இதையருந்தவாயு விருத்திய தோர்தம்பனநோய்-பதைபதைத்தேயோடிவிடும்பார். ௱௰௪

வாதசுரோணிதந்தீரமருந்து.

பாரிங்குவெள்ளெருக்குபாரித்தசுண்ணாம்பும்-ஓர்முருங்கைப்பட் டையுமேயொன்றாகப்-பேர்பெரிய - மருந்தினையுண்டுவிடவாதசுரோ ணிதமும்-திருந்தாமலோடுமிதைச்செய். ௱௰௫

கல்லடைப்புதீரக்குடிநீர்.

செய்யபிரண்டையின்வேர்சேருகின்றசாரடைவேர் - கொய்யுங்கி ராம்புகார்கோலரிசி-ஐயமற-சிங்கிபொன்னுங்காணிவேர் தேனேகுடிநீ ரிற்-றங்குகின்றகல்வீழுந்தான். ௱௰௬

## சூலை சொறி சிரங்குதீர எண்ணெய்.

தானேநல்லெண்ணெயுடன்சாதிலிங்கம்வெள்ளறுகு-தேனேசமனாகச்சேர்த்தபின்பு-மானே-யறிவுடனேகாய்ச்சி யருந்தவேசூலை-சொறிசிரங்குபோமெனவேசொல். ௱௰எ

## அரையாப்புதீர எண்ணெய்.

சொல்லுங்கொடிவேலித்துய்யவேர்சர்க்கரையும் - நல்லவசம்புடனேநற்காயம்-வெல்லுமுள்ளி-விள்ளுந்துருசுவேண்டுநல்லெண்ணெயுடன்-கொள்ளரையாப்போடுமிதைக்கூறு. ௱௰அ

## இருமல் கூட்டோடே தீரக்குடிநீர்,

கூறுஞ்சணம்புகொளிஞ்சிநொச்சிவேரோடு-மாறுமுக்காவேளைசிற்றுமுட்டிவேர்-ஊறும் - பொடுதலைகஞ்சாங்கோரை பொங்குசங்கின்வேரும்-கடியதோர்வேப்பலகுங்காண். ௱௰கூ

காணுங்கடுக்காய் கரியதோர்திப்பிலியும் - பூணும்பிராய்த்துளசிபோதவே-தோணும்-வேலிப்பருத்திதரா வேண்டுமேநன்மிளகும்- பால்மொழியேயானுரைத்தேன்பங்கு. ௱உ௰

பங்குவழுதலையும்பண்புபதினெண்மருந்தும்- தங்குநீர்நாலிலொன்றாய்த்தான்காய்ச்சி-பொங்கமாய் - கொண்டுவிடத்தானிருமற் கூட்டோடேயேகுமென-வண்டணிமாதேயுரைத்தேன்வாறு. கஉக

## இரத்தபிரமேகந்தீரமருந்து,

வாறுமூருங்கையின்பூவண்மையுள்ளகற்றாழைச்-சோறுமாவெண்ணெயுஞ்சூழ்ந்தரைத்து-கூறுடனே-உண்ணவிரத்தமதாயோடும்பிரமேகம்-விண்ணிலேபாயுமுடல்விட்டு, கஉஉ

## எரிகுன்மந்தீரமருந்து,

விட்டேவெள்ளாட்டின்பால்மின்னேதேங்காயின்பால்- இட்டேதான்திப்பிலியுமிந்துப்புந்-தட்டியே-பாகாகக்காய்ச்சிப்பதமாய்க்கடுகருந்தப்-போகுமேகுன்மம்புகல். கஉங

புகல்கின்றநற்செவியம்புரியதிரிகடுகு-இகல்வாய்விளங்கமிதனோடே-யகலும் - கருஞ்சீறிசிற்றரத்தைகஸ்தூரிமஞ்சள் - திருத்துதிப்பிலிமூலஞ்சேர். கஉச

சேரஞ்சிலைநொச்சிச்சேர்ந்தபட்டைச் சாறுடனே-நீர்வெள்ளாட்டுப்பாலுஞ்சேர்த்தரைத்து- நேரான-நல்லெண்ணெயிற்காய்ச்சிநன்றாய்முழுகிவர-சொல்பீனசநீர்ப்பாய்ச்சோடும். கஉரு

விஷசுரஞ்சன்னிதீரஎண்ணெய்.

ஓடுநத்தைச்சூரியுறுவேரடைவேரும்-நாடும்வேலிப்பருத்திநல்வேரும்-கூடவே-தூதுவளைவேருந்துலங்குவிளாப்பாகலின்வேர்-ஈதெல்லாம்பட்டையேறும், கஉசு

ஏறுவேம்பின்பட்டையேற்றகடுக்காய்மிளகு - நாறும்வெள்ளுள்ளியுடனோட்டியே-கூறும்-வசம்புடனேதிப்பிலியும்வந்தருப்பைமேனிக்கசங்காததுத்திவேர்காணும், கஉஎ

காணும்மாநந்தெல்லாங்கல்வமதிலேயரைத்து - பூணும்நல்லெண்ணெய்தனிற்பூண்டெரித்து-வேணுமே - லுள்ளருந்திமேற்பூசஓடும்விஷசுரமும்-கள்ளமுள்ளஜன்னியதுங்கண்டு, கஉஅ

துன்மாமிசம்நீர்ச்செறிப்புங்கல்லடைப்புந்தீரநெய்,

கண்டேகோழிக்காய்கண்சோகியைச்சுட்டு-விண்டாவினெய்கூட்டிவெயிலிலிட்டுக்-கொண்டேதான்-உள்ளேசெலுத்தியிடவோடுந்துன்மாமிசமுங்-கள்ளவேநீர்ச்செறிப்புங்கல்லும், கஉகூ

மூத்திரப்பெருக்குதீரமருந்து,

தேற்றுவிரைகடுக்காய் செப்புமாவாரைவிரை - ஏத்தவிளாம்பிசினேடிந்நாலுகும்-நேத்தியாய்-பங்குக்குக்காற்பலமாய்ப்பசுவின்மோரிற்பருக-பொங்கிவருநீரிழிவுபோம், கநூ

சகலசுரஞ் சன்னி மேகம்தீரக்குடிநீர்,

வல்லசுரமதுபோம் மாந்தமொடுதோஷம்போம்-சொல்லில்வெகுதோஷம்போஞ்சோகைபோம்-நல்லாய்கேள் - தாலவெல்லஞ் சுக்குடனேசாற்றுநிலக்குமிழ்வேர்-காலமேகாய்ச்சியுண்ணக்காண், கநூக

பல்வலிதீரக்கொப்பளிக்குங்கியாழம்,

மருக்காரைசுக்கு மருதந்தோல் வெள்வேல் - எருக்காவரைபிரம்போடேழும்-நருக்கிட்டு - நாலிலொன்றாய்க்காய்ச்சிநாற்பதுநாள்கொப்பளிக்கப்-பாலன்பல்லாங்கிழவன்பல், கநூஉ

கல்லடைப்புதீரமருந்து,

கக்குஞ்சிறுபூளைகானெரிஞ்சிமாவிலிங்கை - விக்கும்பேராமுட்டிவேரதனி-லொக்கவே - கூட்டிக்கியாழமிட்டுக்கொள்ளவேகல்லடைப்பு-காட்டிக்கழன்றோடுங்காண், கநூநூ

குணவாகடம் - முற்றிற்று.